

உ

சிவமயம்

# சைவநீதி



மலர் 21 | ஏவிளம்பி ஐப்பசி - மார்கழி | 2017 Oct. - Dec. | இதழ் 7,8,9



ரூபா.50/-

## திருவாசகப் பெருவிழா சிறப்புமலர்

## பொருளடக்கம்


1. பாவை பாடிய வாயால் பாடிய கோவை அறிமுகம் 2
2. பக்திக்கடலுள் பதித்த பரஞ்சோதி 5
3. ஈழத்தவரின் திருவாசக உரைகளில் இறை பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் 8
4. திருவாசகப் பாடல் பெற்ற திருத்தலங்கள் 11
5. நூல் அறிமுகம் 12
6. திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள் 13
7. திருச்சதகப் பாடல்களில் மாணிக்கவாசகரின் பக்தி நலச் சிறப்பு 18
8. திருவாசகத்தில் ஓர் ஆற்றுப்படை 22
9. மணிவாசகரூடாக நாமுணரும் சைவசித்தாந்தம் 26
10. மணியான மாணிக்கவாசகர் 30
11. திருவாசகத்தில் திருவம்மானை 32
12. அகத்தியர் தேவாரத் திரட்டு உரை விளக்கம் 35
13. திருவருட்பயன் 41
14. திருமுறைப் பெருவிழாவும் எமது தலயாத்திரையும் 43
15. திருவாசகப் பெருவிழா அழைப்பிதழ் 46
16. திருவாசகப் பெருவிழா போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களின் விபரம் 48



**சைவநீதி** முத்திங்கள் இதழ் பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 50.00. ஆண்டொன்றுக்கு ரூபா. 300.00

ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு

ஸ்ரேலிங் பவுண் £10 அல்லது

அமெரிக்க டொலர் US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி



C. Navaneethakumar

No: 1/2, 'B' Block, Govt. Flats,

Hospital Road, Dehiwela. Tel : 077 900 8286

உ
சிவமயம்
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# சைவநீதி



மலர் உ ஏவிளம்பி ஐப்பசி, மார்கழி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 7,8,9

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார் M.A.**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

## திருவாசகச் சிறப்பு

சாத்திரமும் தோத்திரமும் சைவத்தின் இருகண்போன்றன. சாத்திரம் பதின்னான்கு தோத்திரம் பன்னிரண்டு. இப் பன்னிரண்டும் சைவத்திருமுறைகளாகும்.

இவற்றுள் எட்டாந் திருமுறை திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டுமாம். இவற்றை அருளியவர் திருவாதவூரடிகள். இவ்விரு நூல்களையும் தில்லையிலே அம்பலவன் திருக் கரத்தால் எழுதிய உயர்வும் சிறப்பும் பெற்றது.

மார்கழி மாதம் என்றாலே எல்லோர் நினைவிலும் நிறைந்திருப்பது திருவெம்பாவையும் திருவாதிரையுமே. "மார்கழித் திங்கள் தன்னி லாதிரை முன்னீரைந்தே யாகிய தினங்கள்" திருவெம்பாவை இந்நாட்களிலே தில்லையில் மகோற்சவம் இடம்பெறும்.

திருவாசகத்தின் சிறப்புக்கருதித் திருவெம்பாவைக் காலத்திலே "மார்கழித் திருவாதிரைக்கு முதலொன்பது நாளும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரண்டினும் இத் திருவெம்பாவையை ஓதல் வேண்டும். திருவாதிரையிலே திருவெம்பாவை ஓதிப்பின்பு வழக்கப்படியே தேவாரம் முதலியனவும் ஓதல்வேண்டும். (இரண்டாம் சைவ வினாவிடை)

மார்கழி மாதம் முழுவதுமே திருவாசகம் ஓதும் சிறப்பான காலமாகும். திருவாசக முற்றோதல், திருவாசகவிழா, மணிவாசகர் விழா எனப்பல விழாக்கள் பல இடங்களிலே சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

முன்னேச்சரத்தில் நடைபெறும் திருவாசகப் பெருவிழாவிலே சைவநீதி திருவாசகப் பெருவிழா சிறப்பு இதழாக வெளிவருகிறது.

உ
சிவமயம்

# பாவை பாடிய வாயால் பாடிய கோவை - அறிமுகம்

- கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை
(ஓய்வுநிலை அதிபர்)

செம்பொருள் துணிவாம் சைவசித்தாந்தச் செந்நெறிக்கு உயிரென விளங்குபவை பன்னிரு திருமுறைகள். சைவசித்தாந்த சாத்திரங்களும், சைவத்திருமுறைகளும் சைவ மக்களாகிய எமக்கு இருகண்கள் போன்றவை. பன்னிரு சைவத்திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக விளங்குபவை திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். இவை இரண்டும் மாணிக்கவாசகர் சொல்லப் பொன்னம்பலவன் எழுதிய தெய்வீகம் நிறைந்தவை. இவ்வுண்மையைத் திருவாதவூரடிகள் புராணத்தில் கடவுள்மாமுனிவர் பின்வருமாறு கூறுகின்றார்.

**"அங்கவர் உரைத்த வெல்லாம் அம்பலத்தாடுமையர்
செங்கையில் ஏடுவாங்கித் தெளிவுற வரைந்தபின்னர்
பொங்கிய அருளினாரும் புகன்றிடர் அகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டும் என்றார்."**

சிவபெருமானே தில்லைஅம்பலத்தில் அந்தணராக வந்து கேட்டெழுத மாணிக்கவாசகர் சொன்னது திருவாசகம். திருவாசகம் எழுதிமுடியப் "பாவை பாடிய வாயால் ஒரு கோவையும் பாடுக" என அந்தணர் கேட்க மாணிக்கவாசகர் பாடியது திருச்சிற்றம்பலக் கோவையார். இதனை

**"திருச்சதகம் முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்த அகப்பொருட் கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனன் பின் முடிந்தவிடத் துயர்வாதவூரன் மொழி
தரித்தெழுதும் அம்பலவன் எழுத்தென்று சாற்றினான்."**

எனத் திருவாதவூரடிகள் புராணம் கூறும்.

அந்தணர் கேட்டபடி நானூறு பாடல்கள் கொண்ட திருக்கோவையாரையும் பாட அதனையும் எழுதிமுடித்து ஈற்றில் அது அம்பலவன் எழுத்து என ஒப்பமும் இட்டார் என்பது செய்தி.

எனவே எட்டாம் திருமுறையில் 656 பாடல் கொண்ட திருவாசகமும் 400 பாடல் கொண்ட திருக்கோவையாரும் திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் சொல்லத் திருச்சிற்றம்பலவன் எழுதிய தெய்வீகப் பெருமைக்குரியன.

இவற்றில் திருவாசகம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் அற்புத மாணிக்கவாசகங்களாகச் சைவப்பெருமக்களால் போற்றப்பட்டு வருகின்றது.

திருக்கோவையார் அந்த அளவுக்கு அறிமுகமாகவில்லை. இது தமிழில் எழுந்துள்ள மிகச் சிறந்த கோவைப் பிரபந்த இலக்கியமாகும். கோவைப் பிரபந்தமாவது

நானூறு துறைகளில் கட்டளைக் கலித்துறைப் பாவினத்தில் பாடப்படுவது. அகத்துறைப் பொருளில் தலைவன் தலைவியர்க்கிடையே ஏற்படும் அன்புத் தொடர்பை இலக்கிய நயம்படக் கூறுவது.

திருச்சிற்றம்பலக் கோவையார் எனப் போற்றப்படும் இந்நூல் கூத்தப்பிரானைப் பாட்டுடைத்தலைவனாகவும் பக்குவ ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு இறைவனூற் பொருளும் உலக நூல் வழக்கும் ஒருங்கே சொல்லும் அருள் நூல். தலைவன் தலைவியர்க்கிடையில் எழும் அன்பு (காதல்) தழுவிய அகத்துறை மூலமாகப் பேரின்பத் துறைக்கு வழிகாட்டும் வகையில் அமைந்த நூல்.

இதனை அந்தணர்கள் வேதம் என்பர், சிவயோகியர் ஆகமம் என்பர், காமுகர் இன்பநூல் என்பர், தருக்க நூலார் எண்ணூல் என்பர், புலவோர் இலக்கிய நூல் என்பர். படிப்பவரின் மனப்பக்குவத்துக்கேற்ப இன்பம் தரும் இயல்பினையுடையது என்பதனை

**ஆரணங் காண் என்பர் அந்தணர், யோகியர் ஆகமத்தின்**
**காரணங் காண் என்பர், காமுகர் காமநல் நூலதென்பர்,**
**ஏரணங் காண் என்பர் எண்ணர், எழுத்தென்பர் இன்புலவோர்**
**சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே.**

எனும் பாடல் கொண்டு அறிகின்றோம்.

கோவை எனும் பிரபந்த இலக்கியத்துக்கு அமைவாக 400 துறைகளுக்கும் துறைக்கு ஒன்றாக 400 பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்பனைவளமும், செந்தமிழ்ச் சொல்லழகும், அலங்கார அணிகளும் கொண்ட இலக்கியச் செழுமை மிக்கது. இலக்கிய இன்பத்தினூடாகப் பேரின்ப நெறிக்கு இட்டுச் செல்ல வல்லது. ஆதலால் இது முத்தி நூல் எனவும் சொல்லப்படும்.

உதாரணத்துக்கு முதற்பாடலையும், இறுதிப் பாடலையும் பார்க்கலாம். முதலாவது துறை காட்சி, பக்குவ ஆன்மா தலைவியாகக் காட்சி அளிக்கிறது. அதைக் கண்ட தலைவன் உள்ளம் கொள்ளை போகிறது. ஓர் அழகிய பூங்கொடி அன்னநடை நடந்து அசைந்து வருவது போல அவனுக்குத் தெரிகிறது.

தாமரை, நீலோற்பலம், குமிழ், கோங்கு அரும்பு, காந்தள் மலர்களால் ஆன, தெய்வ மணங்கமழும் மாலை ஒன்று இடை நுடங்க, அன்ன நடை பயின்று மன்மதனின் வெற்றிக் கொடிபோலக் காண்கிறதே என வியக்கின்றான்.

**"திருவளர் தாமரை, சீர்வளர் காவிகள், ஈசர்தில்லைக்**
**குருவளர் பூங்குமிழ், கோங்கு பைங்காந்தள் கொண்டோங்குதெய்வ**
**மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்து**
**உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே."**

அழகுமிக்க தாமரைப் பூவையும், சிறப்புடைய நீலோற்பலப் பூவையும், சிவனுடைய சிதம்பரத்தில் நிறம் மிகுந்து பொலிவுடைய குமிழம் பூவையும், கோங்கின்

அரும்புகளையும் பசுமையான காந்தள் பூக்களையும் அவயவங்களாகக் கொண்டு (தாமரைப்பூ - முகம், நீலோற்பலம் - கண்கள், குமிழம்பூ - மூக்கு, கோங்கு அரும்புகள் - மார்பகங்கள், காந்தள்பூ - கரங்கள்) தெய்வ வாசனை மிக்க மாலை ஒன்று வல்லிக் கொடிபோல நுடங்கி, அன்னத்தின் நடை போல நடந்து, அழகிய மன்மதனின் வெற்றிக் கொடி போல அசைந்து, விளங்குகின்றதே என்ன அதிசயம், எனத் தலைவன் வியக்கின்றான்.

இந்தத் தலைவி தலைவனை அடைந்தபின் பெற்ற அனுபவத்தை நானூறாவது நிறைவான துறையிலே கூறுகின்றார். பக்குவ ஆன்மாவை ஆட்கொள்ள வந்த பாட்டுடைத் தலைவனாகிய தில்லைச் சிற்றம்பலவனின் பண்பு நலங்களை வடித்துக் காட்டும் பாடல் இதோ,

**"கார், அணிகற்பகம், கற்றவர் நற்றுணை, பாணர் ஒக்கல்,**
**சீரணி சிந்தாமணி, அணி தில்லைச் சிவனடிக்குத்**
**தார்அணி கொன்றையன், தக்கோர்தம் சங்கநிதி விதிசேர்**
**ஊருணி, உற்றவர்க்(கு) ஊரன், மற்று யாவர்க்கும் ஊதியமே."**

இதில், தலைவனின் உயர்வான பண்பு நலன்களை உவமைகாட்டி உணர்த்துகின்றார்.

கார் - வரையாது கொடுத்தலால் மழைமேகம் போன்றவன்,

அணிகற்பகம் - வேண்டியதை எல்லாம் கொடுத்தலால் அழகிய கற்பக விருட்சத்தைப் போன்றவன்,

கற்றவர் நற்றுணை - நூல் அறிவால் நல்ல துணையாய் இருப்பவன்,

பாணர் ஒக்கல் - இசையாலும், பண்பாலும் பாணர்க்கு இன முறையாய் இருப்பவன்,

சீர் அணி சிந்தாமணி - நினைத்ததைக் கொடுப்பதால் சிந்தாமணியை ஒப்பான்,

அணிதில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன் - அழகிய தில்லைச் சிவனடிகளுக்கு மாலையாகிய கொன்றையை ஒப்பவன்,

தக்கோர்தம் சங்கநிதி - சான்றோர்க்குத் தொலையாத செல்வமாய் இருத்தலால் குறைவிலாச் சங்கநிதி போல்வான்,

விதி - சுற்றத்தார்க்கும், பகைவர்க்கும் சுகதுக்கங்களைத் தப்பாமற் செய்வதால் விதியை ஒப்பான்,

சேர் ஊருணி - தன்னை வந்து சேர்வார்க்கெல்லாம் ஊருக்கு நடுவேயுள்ள பசிதாகம் தீர்க்கும் ஊருணி போல்வான்,

உற்றவர்க்கு ஊரன் - தன்னைச் சுற்றமாகக் கொண்டவர்களைக் காக்கும் தலைவன் போல்வான்,

மற்று யாவர்க்கும் ஊதியமே - ஆதலால் மற்றும் எல்லார்க்கும் இவன் பெரும் பயனாய் இருக்கின்றான்.

கேட்காமலே தரும் கார்மேகம் போலவும், கேட்கத்தரும் கற்பக விருட்சம் போலவும், நினைத்ததைத் தரும் சிந்தாமணி போலவும், தொலையாத செல்வமாம் சங்கநிதி போலவும் வினைப்பயனைத் தப்பாமல் தரும் விதி போலவும், தன்னிடம் வந்தவர்க்குதவும் ஊருணி போலவும் எல்லார்க்கும் பயன் தரும் தில்லைச் சிற்றம்பலவன் பக்குவ ஆன்மாவாம் தலைவிக்குப் பேரின்பப் பேற்றைத் தருவான் என்று கோவையார் நூற்பயனாக உணர்த்தப்படுகின்றது.

உ

சிவமயம்

# பக்திக்கடலுள் பதித்த பரஞ்சோதி

- சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் சாமித்தம்பி பொன்னுத்துரை
(B.A. Hons) ஓய்வுநிலை வங்கியாளர்

சைவநெறியில் இறையுணர்வை அள்ளித்தரும் அருந்தமிழ்ப் பாக்களால் அமைந்தவை திருமுறைகள். பன்னிருதிருமுறைகளும் பரம்பொருளின் திருவருட்கடாட்சத்தை வியந்து பாடப்பட்டவை. பாடுபவர் உள்ளத்தில் பக்திப் பெருக்கை ஊன்றிப்பாயச் செய்பவை. இத்தகைய தெய்வீகத் தன்மை கொண்ட திருமுறைப் பாடல்களில் எட்டாம் திருமுறையாக விளங்குபவை திருவாசகமும், திருக்கோவையாரும். "**அழுதடி அடைந்த அன்பர்**" என்று திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவராற் போற்றப்பட்ட மாணிக்கவாசகரின் "**திருவாசகம் என்னும் தேன்**" அன்பு நெறிபற்றிப் பேசுகிறது; அயரா அன்பைப் பற்றிப் பேசுகிறது; அன்பின் உயர் நிலையான பக்தியைப் பற்றிப் பேசுகிறது. இத்திருவாசகம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கச் செய்வது. பக்தியால் இறைவனைக் கட்டுப்படுத்தும் பான்மையைக் காட்டுவது. "பக்திவலையிற் படுவோன்காண்க" என்பார் மாணிக்கவாசகர். அப்பக்தி, பெருவெள்ளமாகி, கடல்போல் பரந்து சிவபரம்பொருளை அதனுள் பதிந்திருக்க வைப்பது. இதை மாணிக்கவாசகர் தன் அனுபவத்தால் உய்த்து உணர்ந்தவர்.

**"முத்திக் குழன்று முனிவர் குழாம் நனிவாட**
**அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு**
**பத்திக்கடலுட் பதித்த பரஞ்சோதி**
**தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."**

திருத்தெள்ளேணம் - 12

என்று மாணிக்கவாசர் சிவபரம்பொருளை, மாமணிச் சோதியான **பரஞ்சோதி** என்று தன்னை ஆட்கொண்டு ஒளிவடிவாய் தன்னுள்ளம் கோயிலாகக் கொண்டமை பற்றிக் கூறியிருப்பது பக்திநெறியின் தனிச் சிறப்பைக் காட்டுவதாக உள்ளது.

"பக்தியானது குணங்குறிகளற்றது; அது பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை; கணந்தோறும் மேலும் மேலும் பெரிதாக வளர்கிறது. அதில் இடையீடு இல்லை. அது நுண்ணியதிலும் நுண்ணியது; அது அனுபவத்திற்குரியது. பக்தியைப் பெற்றவன் சித்தனாகிறான்; இனியவனாகிறான்; திருப்தனாகிறான்; பரவசனாகிறான்; ஆத்மானந்தனாகிறான்" என்பது பக்தியின் செழுமை பற்றிச் சுவாமி சிற்பவானந்தர் கூறுகிறார்.

இறைமையினை நாடும் இதயத்தின் தாபத்தினைத்தான் பக்தி என்று சான்றோர் கூறுவர். உண்மையெனும் மெய்ப்பொருளை நாடும் நம் உள்ளம் உருகிப்பெருகும் உயர்நிலையிற் பக்தி மலர்கிறது. பக்திமலர்களில் தெய்வீகமணம் கமழ்கிறது. உள்ளம் உருகிப் பெருகும் போது பக்தி விரிந்து செல்கின்றது. "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்பார் திருமூலர். அன்பும் சிவமும் ஒன்றல்ல; அன்புதான் சிவம். அன்புப் பெருக்கினாலன்றி ஆன்மா இறைவனோடு ஒன்றி முத்தி பெறமுடியாது. அன்பால்தான் முக்தி சித்திக்கும். திருவாசகம் அன்புநெறியான பக்தி உணர்வு கொப்புளிக்கும் பேரூற்று; அதில் அடிகளாரின் பக்திப் பெருக்கு எத்துணை விரிந்ததோ அத்துணை பெரியது அவருடைய அறிவுலகமும் என்பதைப் போற்றித்திருவகவலும், திருவண்டப் பகுதியும், பிற பதிகங்களும் தந்துள்ளன. திருவாசகம் மூவரருளிய தேவாரங்களுக்குச் சமமானது. "தேவார திருவாசகங்கள்

பாராயணத்திற்கு உரியனவேயன்றி, மெய்யறிவில்லாச் சாமானிய புலவர்களால் உரை கண்டுபிடிக்கும் இலக்கியங்களல்ல என்பது சைவப் பாரம்பரியக் கொள்கை" என்று சித்தாந்தசரபம் க.கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இக்கருத்தை யொட்டியே ஔவையாரும்,

**"தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்."**

என்று பாடியிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமானைத் தன் பக்திப் பரவசநிலையில் நின்று மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றுகிறார். தனக்குச் செய்த பெருங்கருணைத் திறத்தினால்தான் தனது பக்திக்கடலுள் பதித்த பரஞ்சோதியாக இறைவன் உள்ளான் என்று உள்ளம் நெகிழ்வடைகிறார்.

இறைவன் தனக்குக் காட்டிய நெறி, பக்தி நெறியே என்பதை மாணிக்கவாசகர் மிகத் தெளிவாகவும் அகச் சான்றாகவும் தந்திருக்கிறார்.

**"முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே."**

- அச்சோப்பதிகம் 1

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாகிய சித்தமலம் அறுவிப்பது பக்தி; இதன் மூலம் சிவமாக்கும் சிவோகம் பாவனையைத் தருவது பக்தி; இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தியைத் தருவது பக்தி என்று அனுபவ வாயிலாக உணர்ந்தவற்றை எமக்கும் காட்டுகிறார் மணிவாசகப் பொருமான்.

"ஞானம் ஈசன்பால் அன்பே" என்பார் சேக்கிழார் பெருமான். ஞானத்தினால் பெறுவது சாயுச்சிய முத்தி. மாணிக்கவாசகர் அன்பு, பக்தி மூலம் இறைவன் செய்த அருட்திறனைத் திருவாசகத்தில் பல இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

**"யாவராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்"** (சென்னிப்பத்து - 1)

**"பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்**
**பரகதி கொடுத்தருள் செய்யுஞ் சித்தனே"** (அருட்பத்து - 8)

**"பத்தி தந்துதன் பொற்க ழற்கணே**
**பன்ம லர்கொய்து சேர்த்தலும் முத்தி தந்த"** (சென்னிப்பத்து - 6)

**"சித்த னைச்சிவ லோக னைத்திரு நாமம் பாடித் திரிதரும்**
**பத்தர் காள்இங்கே வம்மின் நீர்உங்கள் பாசந் தீரப் பணிமினோ"**

(சென்னிப்பத்து - 10)

என்று பத்தி நெறிமூலமே முத்தியடையலாம் என உறுதிபடக் கூறுகிறார். அருணகிரிநாதர் கூட பத்தியே முத்திதருவது என்பதை;

**"பத்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிருப் புகழ்பாடி**
**முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற் கருள்வாயே"**

என்று உறுதிப்படுத்துகிறார். அன்பினால் ஆறேநாளில் முத்தியடைந்த கண்ணப்பரின் உயரிய நிலையையும் மாணிக்கவாசகர் தெரியப்படுத்துகின்றார்.

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி"**

என்று திருக்கோத்தும்பிப் பதிகத்தில் பாடியுள்ளார்.

திருவாசகம், ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியவல்லது; என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆளத்தக்கது; சித்தத்தை சிவமாக்க வல்லது. பக்தியின் உச்சநிலையில் மாணிக்கவாசகர் நின்று,

**"அன்பெனும் ஆறு கரையது புரள**
**நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி**
**உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்**
**கரமலர் மொட்டித் திருதயம் மலரக்**
**கண்களி கூர நுண்துளி அரும்பச்**
**சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்**
**தாயேயாகி வளர்த்தனை போற்றி."**

(போற்றித்திருவகவல் 81 - 87)

என்றும்

**"தழலது கண்ட மெழுகது போலத்**
**தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்**
**தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்**
**கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்**
**படியே யாகிநல் லிடையறா அன்பிற்**
**பசுமரத் தாணி அறைந்தாற் போலக்**
**கசிவது பெருகிக் கடலென மறுகி**
**அகம்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்**
**சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப"**

(போற்றித்திருவகவல் 60 - 68)

என்றும்

போற்றித்திருவகவலில் பாடிப் பக்திக் கடலுள் மூழ்கி, அப்பக்திக்கடல் என்னும் "இருதயத்தாமரையுள் பரஞ்சோதியான சிவபரம்பொருள் இருக்கும் நிலையில் தன்செயலற்று, தற்போதம் அழிந்து எல்லாம் அவன் செயல் என்ற பேறு பெற்று சிவமாக்கித் தன்னை ஆட்கொண்ட இறைவனோடு இரண்டறக் கலந்தவர் ஆவார்.

**"செய்காட்டுங் கழுகடவித் தில்லையுளார் பொருள் கேட்கக்**
**கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரைப்**
**பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு**
**மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினார்."**

(திருவாதவூரடிகள் புராணம் - திருவடிபெற்ற சருக்கம் 29)

உ
சிவமயம்

# ஈழத்தவரின் திருவாசக உரைகளில் இறைபற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்கள்

- சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர் ந. சிவபாலகணேசன் B.A.(Hons.),M.A.

ஈழத்தவரின் திருவாசக உரைகளில் இறை பற்றிய கருத்துக்கள் செறிந்தும் பரந்தும் காணப்படுகின்றன. ஐவகையான உரைகள் உள; அவை

திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதி அவர்களது ஆராய்ச்சிப் பேருரை,

திரு. சு. அருளம்பலவாணர் அவர்களது திருவாசக ஆராய்ச்சியுரை,

திரு. க. கணேசலிங்கம் அவர்களது சிவபுராண விளக்கவுரை,

திரு. மு. இளையதம்பி அவர்களது சிவபுராண விளக்கவுரை,

திரு. ஆ. பொன்னையா அவர்களது சிவபுராண தெளிபொருள் விரிவுரை.

இவற்றுள் மூவரது உரைகள் சிவபுராணத்திற்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரு உரைகளும் திருவாசகம் முழுவதற்குமான ஆராய்ச்சியுரையும், ஆராய்ச்சிப் பேருரையுமாகும். இவைகளினூடாக இறை பற்றிய கருத்துக்களைத் தெளிவாக்க முடியும். "ஏகன் - ஒருவனானவன்; அனேகன் - ஒன்றல்லாத பலவுருவானவன், ஓருருவான இறைவன் உயிர்களுக்கு அருள் செய்ய வேண்டிச் சிவம், சக்தி என ஈருருவாயும், பின்னர் அச் சிவமும் சக்தியும் சேர்ந்து ஐவகைச் சதாக்கிய வடிவங்களாயும், அச்சதாக்கியத்திலிருந்து ஈசுர வடிவங்கள் இருபத்தைந்தாயும் காரணேசுர வடிவங்கள் ஐந்தாயும் பிறவாயும் ஆனமை பற்றி 'அனேகன்' என்றார்." என அருளம்பலவாணர் கூறுவது நோக்கத்தக்கது. 'ஏகன்' 'அனேகன்' என்பன இறை பற்றிய கருத்துக்கள். ஓருருவானவன் என்பதின் இறையின் சிறப்பியல்பு கூறப்படுவதும், 'அனேகன்' என்பதில் இறையின் பொது இயல்பு குறிப்பிடுவதும் காணலாம். பலவுருவானவன் என்பதில் உயிர்களுக்காக அருள் செய்ய பல்வேறு வித வடிவு கொள்வதை இவ்வுரையாசிரியர் குறிப்பிடுகிறார். சைவசித்தாந்தக் கருத்தாக இங்கு சிறப்பியல்பு, பொது இயல்பு இடம்பெறுகின்றமையைக் காணமுடியும். "சிவபரம்பொருள் சிறப்புநிலையில் இவ்வுலகிற்குத் தான் ஒருவனாய் இருக்கின்றவன். பொது நிலையில் அன்பால் நினைவாரது உள்ளங்களில் அவர்கள் நினையும் வடிவுகளோடு நின்று அருளுகின்றான்" என உரையாசிரியர் பொன்னையா அவர்கள் கூறுவதும் கருத்திற் கொள்ள வேண்டியதே ஆகும். ஏகன், அனேகன் என்பதை விளக்க வந்த நிலையில் சிறப்புநிலை, பொதுநிலை என்ற விடயங்களைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார் இவ்வுரையாசிரியர்.

இறைவன் ஒவ்வொரு உயிரோடும் அவையே தானேயாய்க் கலந்து இருக்கின்றான். அவன் உயிர்களுடன் ஒன்றாய் நிற்கின்றான், வேறாய் நிற்கின்றான், உடனாய் நிற்கின்றான். உயிர்கள் எண்ணிறந்தவை. எண்ணிலி அனேகர் அந்த உயிர்கள் ஒவ்வொன்றினோடும் இறைவன் பிரிப்பின்றி நிற்கின்றான். அதனால் அனேகன் ஆகின்றான் என்பர் பொன்னையா என்ற உரையாசிரியர். இவ்வுரையாசிரியர் உயிர்களுடன் உடனாய் நிற்பதனால் இறை அனேகன் ஆகின்ற கருத்தை கூறுவதும் நோக்கத்தக்கது. எண்ணற்ற உயிர்கள் என்பதும் ஒன்றாய், உடனாய், வேறாய், இறை நிற்கின்ற நிலை என்ற கருத்தும் அனேகன் என்ற விடயத்தால் இங்கு காட்டப்படுவது அவதானிக்கத்தக்கது. இறைவன்

விண்ணுலகம் மண்ணுலகம் முதலாகிய எல்லா உலகங்களும் தன்னுள் அடங்கத் தான் அவற்றிற்கு அப்பாலுமாய் நிறைந்து ஒளிவடிவினனாய் உள்ளான் என்பது "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்" என்பதனாற் கூறப்பட்டது என்கிறார் அருளம்பலவாணர். இப்பகுதி இறையின் சிறப்பியல்பாக உரையாசிரியரால் காட்டப்படுகின்றது. இறை தான் ஒளிவடிவினனாய் அப்பாலாய் நிற்கின்ற நிலை இங்கு காணப்படுகின்றது. மனத்தினால் எண்ணி உணர்ந்து சுட்டி அறியப்படும் தன்மைக்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்பது எண்ணிறந்து என்பதனாற் கூறப்பட்டது என்பர் அருளம்பலவாணர். சுட்டியறியப்படாத தன்மை இறைவனது சிறப்பியல்பு. இது அப்பாற்பட்ட நிலையாகும். இவ்வாறே இறைவன் மண்ணுலகில் வாழும் உயிர்க் கூட்டங்களில் மற்று எல்லா இடங்களில் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்பவன் ஆகையால் அப்பொருளைத் தரும் மண்ணிறைந்து என்னும் சொற்களை வைத்தார் என்பர் பொன்னையா எனும் உரையாசிரியர். இவர் மண்ணிறைந்து என்பதற்கு ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்கின்ற நிலை என விளக்குகிறார் இக்கருத்து சைவ சித்தாந்தத்தில் மிகமுக்கியமானதொன்றேயாகும். அது அத்துவித நிலையைக் காட்டுவதேயாகும். சொல்லளவைக் கடந்து நின்ற பழையோன். மனத்தினது உணர்ச்சியால் அளந்து அறிந்து கொள்ளவும் முடியாதவன். கண் முதலிய ஐம்பொறிகளின் அறிவினால் அறியப்படுதலும் இல்லாதவன் என்பர் அருளம்பலவாணர். இக்கருத்துக்கள் இறையின் சிறப்பு நிலையைக் காட்டி நிற்கின்றன. அந்நிலையை வாக்குமானாதீத கோசரன் என சைவசித்தாந்தம் கூறும். இது இறையின் இயல்பான நிலையேயாகும். "உரை உணர்விறந்த ஒருவ போற்றி" என்பதற்கு வாயாற் சொல்லவும் மனத்தால் நினைக்கவும் அடங்காத ஒப்பற்றவனே நினக்கு வணக்கம் என் அருளம்பலவாணர் உரை கூறுவதன் மூலம் இறையின் சிறப்பிலக்கண நிலையை இதிலும் வலியுறுத்துவதாக அமைவதைக் காணலாம். "ஒரு சிறந்த முழுமுதற் பொருள் அழிவிலதாக என்றும் உள்ளது என்று பொது வகையான் அறியும் அன்பர்களுக்கெல்லாம் பெண்ணோ, ஆணோ, அலியோ இன்னதெனத் துணிந்து அறிய முடியாத நிலையில் உள்ளான்" எனவும் கூறுவர். "அவன் அவள் அது எனும்" எனச் சுட்டப்பட்ட முக்கூற்று பிரபஞ்சத்தை இது குறித்து நிற்கின்றது. ஆனால் சுட்டி அறியப்படாத நிலையிலுள்ள இறையைத் துணிந்து இது எனக் கூறமுடியாத நிலை அதன் சிறப்பிலக்கணத்தை உணர்த்துகின்றது. "மண்ணுலகிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ளாரும் கீழ் உலகிலுள்ளாரும் இவற்றின் புறம்பான உலகிலுள்ளவருமாகிய எவராலும் தமது அறிவாற் காண்டற்கரியவனும்" என அவனருளே கண்ணாகக் காணிலல்லால் யாவராலும் காணுதற்கு ஒண்ணாத இறை என்பதை இவ்வாறு உரையாசிரியர் காட்டி, இறையின் உண்மை இயல்பாகிய சிறப்பினைத் தெளிவாக்குகிறார். "உரு நாம் அறிய" என்பதில் உரு என்பது சொரூப இலக்கணத்தை. இறைவன் சுட்டறியப்படாதவனாதலின் நாமம், உருவம் முதலாய உயிரியல்புகள் இலானாயினான் என்பதிலும் உண்மையுரு என்பது சொரூபத்தையேயாகும்.

"ஆதியும் முக்குணங்களும் சிறிதும் இல்லாதவன், அழிவில்லாதவன் அவ்வியல்பினன் இங்கு வரும் வண்ணம் நீ கூவி அழைப்பாயாக" எனக் கூறுவதும் காணலாம். தோற்றம், முக்குணம் இல்லாத நிலையும் சிறப்பு நிலையே. அது இறையின் உண்மை நிலையேயாகும். "புலவோர் நின்னைப் பூதங்கள் தோறும் கலந்து நின்றனை"

என்று கூறினர். அதனை அறிவோம் அன்றி போக்கிலன் வரவிலன் என்று கூறிக்கொண்டு கீதங்கள் பாடுதலும் அதற்கேற்ப ஆடுதலும் செய்வதைக் கேட்டும் கண்டும் அறிவோம், அன்றி உனைக் கண்டறிந்தவரை நாங்கள் கேள்விப்பட்டும் அறியோம் என்ற உரையும் கருத்தில் எடுக்கப்பட வேண்டியதேயாகும். இறையைக் கண்டவர்களை நாங்கள் கேள்விப்படவில்லை. பிறர் எவரும் இவர் இறையைக்கண்டார் எனச் சொல்லவும் கேட்டதில்லை. இறை பாச, பசு ஞானங்களால் அறியப்படாதவன் என்பதும் இங்கு தெளிவாகின்றது. மற்றும் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை என்றதனால் இறை அப்பாலுக்கப்பாலாய் நிற்கின்ற இயல்புடையவன் என்பது போதரும். இது சிறப்பு நிலையைக் குறித்து நிற்கின்றது. மேலும் திருப்பெருந்துறையில் எனக்கு அருள் செய்து ஆட்கொண்டு ஆணவ இருளைக் கடிந்து, உள்ளத்து எழுகின்ற ஞானசூரியனைப் போன்று நின்ற நினது சொரூப இலக்கணத்தை இப்போது இத்தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணே நினைப்பற நினைந்தேன் என்ற நிலையும் உற்று நோக்கத்தக்கது. இதில் சொரூப நிலை தெளிவாகக் கூறுவது அவதானிக்க முடியும். இதே கருத்தில் கந்தபுராணம் கூறும் பாடல் பின்வருமாறு :

**"ஊரிலான் குண குறியிலான் செயலிலான் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுள்யே நின்றான்."**

இறையின் சொரூபநிலை, தடத்தநிலை, அத்துவிதம் என்ற கருத்துக்கள் திருவாசக உரைகளது நிலைகளில் விளக்கம் பெற்ற தன்மைகளை இதில் காணமுடிந்தது. சைவசித்தாந்தத்தில் பல்வேறு கருத்துக்கள் காணப்படினும் ஒரு சில கருத்துக்களே இதில் காட்டப்பட்டன. "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்பது மணிவாசக சுவாமிகளது கருத்தாகும். இக்கருத்தைக் கடைப்பிடிப்பவர்கள் திருவாசக உரைகளை, உரைகள் பற்றிய விளக்கங்களை அறிவதும் உணர்வதும் இன்றியமையாததேயாகும். தமிழுக்குரிய மார்கழி மாதம் திருவாசகத்திற்கு சிறப்பான மாதமாகும். இந்த மாதத்திலே அனேகமான இடங்களில் திருவாசக முற்றோதல் நடைபெறுவது காணக்கூடிய காட்சியாகும். இந்த நிலையில் உரைகள் பற்றிய விளக்கங்களை மார்கழி மாதத்தில் சிந்திப்பதும் சிறப்பு அம்சமாகவே அமையும். எனவே சிவனடியார்கள் திருவாசகத்தைப் பொருள் உணர்ந்து ஓத எல்லாம் வல்ல சிவபெருமானைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி"

உ
சிவமயம்

# திருவாசகப் பாடல் பெற்ற திருத்தலங்கள்

சித்தாந்தச்செம்மணி செல்லையா நவநீதகுமார் M.A.

திருப்பெருந்துறையில் திருவாதவூரடிகளுக்கு திக்ஷை மந்திர உபதேசம் செய்த பரமாச்சாரிய சுவாமிகளான இறைவன் "உத்தரகோச மங்கை முதலாம் தெய்வீக லிங்கமேனி வைத்த நம் பதிகள் தம்மில் வணங்கி, கழுக்குன்ற மென்னும் மந்நெடும்பதி இறைஞ்சிப் பொன்னினம் பலத்திலெய்தி யெம்பதம் பெறுவாய்'' என்றார்.

திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் "திருந்திய குருந்தின் கீழோர் தெய்வ பீடிகையுஞ் செய்து வரந்தரு செய்ய பாத மலர் வகுத்திறைஞ்சி யாங்கே யிருந்தனர்'' அவ்வண்ணம் இருக்கும் நாளிலே

**வெண்பிறை முடித்த வேணி விண்ணவ ரன்பிலாத**
**பண்பின ரெனினுந் தம்மைப் பாடினர்க் கிரங்கு வாரென்**
**றெண்பெறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்து நாதன்**
**வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகல லுற்றார்.**

திருப்பெருந்துறையிலே திருவாசகத்தில் முதலாகவுள்ள சிவபுராணத்தை முதலிலே பாடினார். திருவாதவூரடிகள் பல தலங்களுக்குச் சென்றிருந்தும் திருபெருந்துறை, உத்தரகோசமங்கை, திருத்தோணிபுரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், கோயில் (சிதம்பரம்) ஆகிய ஏழு தலங்களில் திருவாசகம் பாடியுள்ளார். இவற்றுள் திருத்தோணிபுரம், திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், சிதம்பரம் ஆகிய ஐந்தும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களாகும்.

## தலங்களும் பதிகங்களும்

### 01) திருப்பெருந்துறை

1. சிவபுராணம்
2. திருச்சதகம்
3. திருப்பள்ளியெழுச்சி
4. செத்திலாப்பத்து
5. அடைக்கலப்பத்து
6. ஆசைப்பத்து
7. அதிசயப்பத்து
8. புணர்ச்சிப்பத்து
9. வாழாப்பத்து
10. அருட்பத்து
11. பிரார்த்தனைப்பத்து
12. குழைத்தபத்து
13. உயிருணிப்பத்து
14. பாண்டிப்பதிகம்
15. திருஏசறவு
16. அற்புதப்பத்து
17. சென்னிப்பத்து
18. திருவார்த்தை
19. திருவெண்பா
20. பண்டாய நான்மறை

### 02) கோயில் (சிதம்பரம்)

1. கீர்த்தித்திருஅகவல்
2. திரு அண்டப்பகுதி
3. போற்றித்திருஅகவல்
4. திருப்பொற்சுண்ணம்
5. திருக்கோதும்பி
6. திருத்தெள்ளேணம்
7. திருச்சாழல்
8. திருப்பூவல்லி
9. திருவுந்தியார்
10. திருத்தோணோக்கம்
11. திருப்பொன்னூஞ்சல்
12. அன்னைப்பத்து
13. குயிற்பத்து
14. திருத்தசாங்கம்
15. கோயில்மூத்ததிருப்பதிகம்
16. கோயில் திருப்பதிகம்
17. கண்டபத்து
18. அச்சப்பத்து
19. குலாப்பத்து
20. எண்ணப்பதிகம்
21. யாத்திரைப்பத்து
22. திருப்படையெழுச்சி
23. திருப்படையாட்சி
24. ஆனந்தமாலை
25. அச்சோப்பதிகம்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

நூல் அறிமுகம்

# ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோவில் பண்பாட்டுக் கோலங்கள்

நூலாசிரியர் : பா சிவராமகிருஷ்ண சர்மா

ஆலயங்களின் வரிசையில் சிறப்புமிக்க முன்னேஸ்வரம் கோயிலின் பாரம்பரியம் பண்பாடு மரபு என்பவைகளையும், தொன்று தொட்டுப் பின்பற்றி வருகின்ற பூஜைமரபுகளையும் விளக்கிக் கூறும் இந்நூலானது, சுவையூட்டும் வகையில் பல்வேறு கதைகளையும், சம்பவங்களையும், சம்பாஷணைகளையும் தாங்கி வெளிவந்துள்ளமை, புதிய போக்கில் தடம் பதித்துள்ள ஒரு வெளியீட்டு முயற்சி என்று கூறிக் கொள்ளலாம்.

இந் நூலாசிரியர் ஒரு விஞ்ஞான பட்டதாரியாகவும், பல்வேறு அரச பதவிகளில் பணி புரிந்தவராகவும் இருந்த தனது அறிவு, அனுபவம் இரண்டையும் சேர்த்து இணைத்து முன்னேஸ்வரத்துப் பாரம்பரியத்தையும், கோயிலின் சிவாசாரிய சந்ததியின் பெருமைகளையும் புலப்படுத்தியுள்ளார்.

கோயில் வரலாற்றில் இன்றுவரை இடம்பெறும் நித்திய நைமித்திய கிரியைகள், மகோற்சவங்கள், வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி போன்ற வழிபாட்டு முறைகளின் பல்வேறு அம்சங்களை நூலாசிரியர் விளக்கியுள்ளமை படிப்போர்க்குத் தெளிவை எற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அத்துடன் ஆசிரியரின் கற்பனை வளத்தையும் காணக்கூடியதாகவுள்ளது.

கோவிலின் திருவிழாக்கால நிகழ்வுகளை வரலாற்று ரீதியாகச் சுவைபடக் கூறிச் செல்லும் பாங்கும் இங்கு கவனத்தில் எடுக்கக்கூடிய விடயமாகவுள்ளது. மொத்தத்தில் இந்நூல் முன்னேஸ்வரக் கோவிலுக்கான முக்கியமான ஒரு வரலாற்று ஆவணமாகப் புதியதொரு கண்ணோட்டத்துடன் அமைந்துள்ளது என்று கூறிக்கொள்ளலாம்.

(11ஆம் பக்கதொடர்ச்சி)

| | |
|---|---|
| **03) உத்தரகோசமங்கை** | 1. நீத்தல் விண்ணப்பம் |
| **04) திருவண்ணாமலை** | 1. திருவெம்பாவை 2. திருஅம்மானை |
| **05) திருக்கழுக்குன்றம்** | 1. திருக்கழுக்குன்றப்பதிகம் |
| **06) திருத்தோணிபுரம்** | 1. பிடித்தபத்து |
| **07) திருவாரூர்** | 1. திருப்புலம்பல் |

மேற்கூறிய தலங்களைவிட வேறும் சில தலங்களை மாணிக்கவாசகர் தரிசித்ததாகக் கடவுள்மா முனிவர் திருவாதவூரடிகள் புராணத்திலே குறிப்பிட்டுள்ளார்.
அவை

1. திருவிடைமருதூர் 2. திருமுதுகுன்றம் 3. திருவெண்ணெய்நல்லூர்
4. கச்சியேகம்பம் (காஞ்சிபுரம்)

என்பனவாகும்.

உ
சிவமயம்

# திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள்

கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன், முதுநிலை விரிவுரையாளர் தரம் 1,
இந்துநாகரிகத் துறை, யாழ் பல்கலைக்கழகம்.

தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களின் வரிசையில் திருவாசகத்திற்குத் தனித்தவமான சிறப்பு உள்ளது. பக்திப் பாவலர்கள் வரிசையில் மணிவாசகர் தலைமைத் தகுதி பெற்றவர் என்பது அனுபூதிமான்களின் அனுபவ வாக்கு. 'தேன்' எனப் பாராட்டத்தக்க திருவாசகப் பாடல்கள் மூலம் தமிழுக்கும் பக்தியின் மொழி என்ற பாராட்டை துறைசார் வல்லுநர்களிடம் பெற்றுத் தந்தவர் மணிவாசகர். அவர் தமது பாடல்களின் வழி வெளிப்படுத்திய இறையனுபவமே இத்தகைய நிலைக்கான அடிப்படை அம்சம். அவர் இறைவனிடம் புலப்படுத்தி நின்ற பக்தி நிலை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் மூவரும் பாடியருளிய தமிழ் தேவாரம் எனப்படும். மணிவாசகர் பாடியருளியது திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களுமாகும். பன்னிரு திருமுறையில் எட்டாவதாக வைத்து எண்ணப்படுவது. 'எட்டு' என்பது இறைவனுடைய திருவடியைப் பற்றுதற்குரிய ஒரு பண்பு. 'உணர்ந்து எட்டே' என்பார் திருமூலர். திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய அருள்நூல் எனப் பொருள்படும். இந்நூல் உருகாத உள்ளத்தையும் உருக்கிப் பசுத்துவங் கெடுத்து பதித்துவம் அருளவல்லது. ஆதலால் இது செந்தமிழுக்கு அன்பு மறையாய்ப் போற்றப்படுகின்றது. திருவாசகத்தைத் தேன் எனக் கூறுதல் மரபு. தேன் உடற்பிணிக்கு மருந்தாதல் போல் திருவாசகம் உயிர்ப்பிணிக்கு மருந்தாகின்றது.

**தேவர் குறளும் திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசக மென்றுணர்** எனவும்

**தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவாசக மென்னுந் தேன்**

எனவும் வரும் பாடல் அடிகளால் இந்நூலின் சிறப்புத் தெளிவாகின்றது. ஓதுவார் உள்ளத்தை உருக்கவைக்கும் பேராற்றல் மிக்கது. நாடு, மொழி, இனத்தால் வேறுபட்டவரையும் உருகவைக்கும் "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்றும் கூறுவர். மணிவாசகருடைய காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர்கள்.

"மணிவாசகருடைய வாய் திருவாய். அதுவும் ஒப்புயர்வற்ற மலர்வாய். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் தேன் என்றார். அதைப் போல வாசகம் என்றால் மிக நுட்பமாகப் பரவும் தன்மையது. மலரிவிருந்து நுட்பமாக வெளிப்படுவது மணம். அதற்கு வாசம் என்னும் பெயர். வாசம் என்றால் வாழ்கின்ற இடம் என்றும் ஒரு

பொருள். மணம் என்று மற்றொரு பொருளும் உண்டு. மாணிக்கவாசகர் வாயிலிருந்து வெளிவந்த மொழிகள் வாழ்கின்ற மொழிகள். இதனால் இதற்கு அடைசேர்த்துத் 'திருவாசகம்' என்று பெயரிட்டனர்." என்று தவத்திரு தேமொழியார் சுவாமிகள் குறிப்பிடும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அரிய தெய்வீகப் பாடல்களை இயற்றிய மணிவாசகரின் அறிவியற் சிந்தனைகள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். மணிவாசகர் தம் கல்வி, அனுபவம், அறிவு எனும் இவற்றைத் துணையாகக் கொண்டு அமைச்சர் பதவியை அடைந்தவர். வாரியார் சுவாமிகள் கூறியது போல் "பிறப்பின் உரிமையால் வருவது அரச பதவி. அறிவின் திறத்தால் வருவது அமைச்சர் பதவி ஆகும்." இவருக்கு வந்த அமைச்சர் பதவி என்பது அறிவின் திறத்தாலே வந்த பதவி என்பதில் ஐயமில்லை.

ஆதிமுதல் அந்தம்வரை அனைத்தையும் அகக்காட்சியிலே காணக்கூடிய பேரறிவு நிலையே ஞானம். எல்லா நிகழ்ச்சிகளின் அடிநாதமாக அடித்தளமாக அமைந்திருக்கும் ஒன்றே பிரம்மம் என்று உணரப்படுகின்றது. பிரம்மத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளும் விஞ்ஞானி அறிவுவிழிப்பும், மெய்ஞ்ஞானி ஆன்ம விழிப்பும் அடைகிறான். புரியாத பல புதிர்களுக்கு விடையினை விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியும் பெறுகின்றனர். புலன்களால் பொருள்களை உணரும் பொழுது மன அலைச்சூழல் மிகவும் விரைவாக இயங்குகிறது. அந்த விரைவு அகத்தவச் சாதனையால் குறைக்கும் நுண்ணிய நிலையில் தான் மறை பொருள்களை உணரமுடியும். இந்நிலையை அல்ஃபாரைம் (Alpharhytham) என்பர். இந்த அல்ஃபாரைம் என்ற அதிர்வு நிலைக்கு மனத்தைக் கொண்டு சென்றோமாயின் வான மண்டலத்திலுள்ள எண்ண அலைகளையெல்லாம் தானாகவே வாங்கிக்கொள்ளக்கூடிய வலிமை மனத்திற்கு உண்டாகிறது என்றும் சிற்றறிவானது பேரறிவோடு ஒன்றி நிற்கும் யோகம் கைகூடுகிறது என்றும் சித்தர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மஞானம் கைவரப்பெற்ற நிலையில் தனக்குக் கிட்டிய இப்பேற்றை

**நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே**
**காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னும்**
**கேளாதன வெல்லாங் கேட்பித் தென்னை**

(திருச்சதகம், பாடல் எண். 28)

என்ற பாடலில் மணிவாசகர் விளக்கியுள்ளார். திருவம்மானைப் பகுதியிலும் இதனையே குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மாணிக்கவாசகர் விஞ்ஞான அறிவைப் பெற்றுத் திகழ்ந்தார். அவருடைய அறிவியல் அறிவு பக்திக்கு இடையூறாக அமையவில்லை. எடுத்துக்காட்டாக திருஅண்டப்பகுதியைக் குறிப்பிடலாம். இத் திருவண்டப்பகுதியை மாணிக்கவாசகர் இணைக்குறள் ஆசிரியப்பாவில் பாடியுள்ளார். இணைக்குறள் ஆசிரியப்பா என்பது ஆசிரியப்பாவின் பொது விலக்கணம் பெற்று ஈற்றடியும் முதலடியும் தவிரப் பிற அடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வருவது. மாணிக்கவாசகர் இயற்கை வெளியிலே காணப்படுகின்ற அசைவுகளையெல்லாம் இறைவனாகவே கண்டார். அவ்வாறு கண்டதை மிக அழகாகத் திருவண்டப் பகுதியில் உரைக்கின்றார்.

**"அண்டப்பகுதியின் உண்டப் பிறக்கம்
அளப்பருந்த தன்மை வளப்பெரும் காட்சி
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழைகதிரின் துன் அணுப்புரையச்
சிறிய ஆகப் பெரியோன்."** (திருவாசகம் 3)

இப்பாடலின் அண்டமாகிய பேருலகப் பகுதிகளின் உருண்டை வடிவமும் அவற்றின் எல்லையற்ற தன்மையும், வளப்பமும் ஒன்றுக் கொன்று மேலாக நின்று நூற்றொரு கோடிக்கு மிக்கன. வீட்டின் துறைவழிக் காணும் கதிர் அணுக்களை ஒத்து (அண்டங்கள்) சிறியனவென்று சொல்லும்படி பெரியோனாக விரிந்தும் பரந்தும் இறைவன் உள்ளான் எனக் குறிப்பிடுகிறார். இங்கு காணப்படும் சில அறிவியல் உண்மைகளை எடுத்துக்கொண்டு அவை தற்கால அறிவியல் புதுமைகளுடன் எவ்வளவிற்கு ஒத்துள்ளன என்பதை நோக்கினால், "அண்டப்பகுதி" என மாணிக்கவாசகர் கூறியதை இன்று Uniiverse என்று கூறுகிறோம். அதிலுள்ள உண்டைப் பிறக்கம் என்பதை Galaxy என்று கூறுகிறோம். நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என்பதை Expanding Universe என்கிறோம். இப்பாடலில், அண்டமாகிய பெரும்பகுதியில் நூறுகோடியின் மேலான உண்டைகள் பெருக்கமுற்று விரிந்தன என்கிறார் மணிவாசகர்.

பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆதலின் அவன் பெருமையை நோக்க இவ்வண்டமும் அணுவை ஒப்பச் சிறியதாய் விட்டது என்கிறார். எவ்வாறு அண்டத்தைப் பற்றி அறிந்திருந்தாரோ அதைப்போலவே அணுவைப்பற்றியும் அறிந்திருந்தார். இதனை

**"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தரும் தன்மைஇலையோன் காண்க"**

என்று குறிப்பிடுகின்றார். இதில் விரிந்த உலகமெல்லாம் கலந்து நிற்பவன். மிக நுண்மையான பொருளிலும் வியக்கத்தக்க நுண்மையாய் நின்று இயக்குவோன் காண்க என்கிறார்.

மாணிக்கவாசகர் அணுக்களின் திரட்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எல்லாப் பொருட்களும் அணுக்களால் ஆனவை. ஒரு பொருளின் மிகச் சிறிய வடிவமே அணுவாகும். இவற்றின் கூட்டியக்கத்தாலேயே ஒவ்வொரு பொருளும் மதிக்கப்படுகின்றன. அதுவே அப்பொருளின் தன்மையாகிவிடுகின்றது. இதனை

**"அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்"**

(திருவாசகம் - திருவண்டப்பகுதி வரிகள் 20 - 6)

என்ற அடிகள் விளக்குகின்றன.

திருவாசகத்தில் கருவியல் (Embryology) பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. டார்வினின் பரிணாமக் கொள்கை பற்றிக் குறிப்பிட்டவர் அரிய மானிடப் பிறவி

மாதந்தோறும் அடையும் வளர்ச்சி நிலையையும் விரிவாகப் பாடியுள்ள திறம் போற்றத்தக்கது. ஆண், பெண் சேர்க்கையால் உருவாவதே கருவாகும். அவ்வாறு உருவான நிலையிலிருந்து ஒவ்வொரு மாதமும் எத்தகைய பெருந்தடைகளைக் கடக்கின்றது என்பதை,

**"மானுடப்பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்**
**மும்மதிதன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**அஞ்சுதிங்களின் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறு திங்களின் ஊறவர் பிழைத்தும்**
**ஏழு திங்களின் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களின் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்து"**

(போற்றித் திருவகவல். வரிகள் 14 - 25)

என்ற அடிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. நுண்ணியல் கருவிகொண்டு கைதேர்ந்த கருவியல் மருத்துவர் பார்ப்பதைப் போன்று துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறியுள்ளார்.

இப்பரந்த உலகைத் தோற்றுவித்த இறைவன் அதில் வாழ உயிர்களையும் தோற்றுவித்தான். புல்பூண்டில் தொடங்கி மனிதனில் நிறைவுறும் இவ்வுயிர்க்குலம் முழுவதும் தொடர் கொண்டே நிலைபெற்று வருகின்றது. திருவாசகத்தின் தொடக்கப்பகுதியான சிவபுராணத்தில் ஓரறிவு உயிரிலிருந்து படிப்படியாக முன்னேறி ஆறறிவு உயிருக்கு வந்து, பேயாய்க் கணங்களால் ஆன பிறகு ஞானியாகிறார். அவ்வாறு ஆனபின்பு உச்சிக்கே போய்விட்டார். அங்கிருந்து பார்க்கும் போது தான் எந்தப் பிறவியிலிருந்து இந்தப் பிறவிக்கு வந்தோம் என்பதை உணர்கிறார். ஓரறிவில் இருந்து ஆறறிவுவரை வளர்ந்த நிலையைக் காட்டுகிறார். இதனை

**"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன். எம்பெருமான்**
**மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"**

(திருவாசகம் 1 - சிவபுராணம்)

என்ற அடிகளால் விளங்குகிறார்.

அணுவின் அமைப்பும் அண்டங்களின் அமைப்பும் ஒப்புடையனவாக உள்ளன என அறிவியலாளர் ஆய்வுகளால் மெய்ப்பித்துள்ளனர். இவ்வாறு அறிவியலறிஞர் ஆய்வுகள் மூலம் கண்டவற்றையே ஞானச் செல்வர்கள் உள்ளுணர்வால் அநுபவமாகக் கண்டுள்ளனர். இவ்வகையில் அறிவியலறிஞர்களின் அனுபவவியலும் ஞானச் செல்வர்களின் அனுபவவியலும் ஓரிடத்தில் சந்திப்பதை நாம் அறியமுடிகின்றது. அணுக் கோயிலின் முன்நிற்கும் விஞ்ஞானிகளும் அண்டக் கோயிலின் முன்நிற்கும் மெய்ஞ்ஞானிகளும் ஒரே உண்மையைத்தான் காண்கின்றனர்.

ஊழியின் முடிவில் இந்த அகிலம் முழுவதும் அணுத்தத்துவமாக மாறும் என்பதையும், மீண்டும் படைப்புக்காலத்தில் அது அண்டங்களாக மாறும் என்பதையும் மெய்யுணர்வாளர் விளக்குகின்றனர். இந்த உண்மையினையே இன்றைய அறிவியலறிஞூர்கள் புலனுணர்வைப் பன்மடங்கு பெருக்கும் கருவிகளைக் கொண்டு விளக்குகின்றனர். நாம் காணும் பொருள்கள்யாவும் அணுத்திரளைகளேயன்றி வேறொன்றுமில்லை என்பதை எடுத்துரைத்தனர். இதனையே அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து விளக்குகின்றது. அணுவிலும் இந்த ஆனந்தக் கூத்தையே நாம் காணுகின்றோம் என்பதை மணிவாசகப் பெருமான்,

**"பூதங்கள் ஐந்தாகிப்**
**புலனாகிப் பொருளாகிப்**
**பேதங்கள் அனைத்துமாய்ப்**
**பேதமிலாப் பெருமையனைக்**
**கேதங்கள் கெடுத்தாண்ட**
**கிளரொளியை மரகதத்தை**
**வேதங்கள் தொழுதேத்தும்**
**விளங்குதில்லைக் கண்டேனே"**

(திருவாசகம் - கண்டபத்து - 10)

என்ற விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் ஒருங்கே காண்கின்றனர்.

முடிவாக நோக்கின் 'அறிவே சக்தி' என்ற உண்மையை மெய்யறிவு பெற்ற மெய்ஞ்ஞானிகளும் அறிவியல் அறிவு பெற்ற விஞ்ஞானிகளும் ஒருதளத்தில், ஓரிடத்தில், ஒன்றாகவே சந்திப்பதை மாணிக்கவாசகரது திருவாசகத்தினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது. அறிவியல் காணாத அல்லது காணமுயலுகின்ற ஒன்றை ஆன்மிகவியல் கண்டுகொண்டது. விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானம். அதுவே அறிவின் எல்லை. அண்ட சராசரங்கள் எல்லாம் இறைவனின் படைப்பே ஆகும்.

உசாத்துணை நூல்கள்


1. திருவாசகம் ப. இராமநாதபிள்ளை விளக்கஉரை
2. திருவாசகத்தில் ஓர் திறனாய்வு - டாக்டர் இந்திரா சோமசுந்தரம் - 1993
3. திருவாதவூரரும் சைவத்திருநெறியும்
   இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2014
4. ஆன்மிகமும் அறிவியலும் - ந. சுப்பு ரெட்டியார் - 1985
5. திருக்கேதீச்சரத் திருக்குடத் திருமஞ்சன மலர் - 1976

உ
சிவமயம்

# திருச்சதகப் பாடல்களில் மாணிக்கவாசகரின் பக்திநலச் சிறப்பு

சித்தாந்தரத்தினம் சத்தியவதனி மாணிக்கநடராசா

மாணிக்கவாசகரின் திருவாசகத்திலுள்ள திருச்சதகம் நூறு பாடல்களை அந்தாதித் தொடையாய்த் தன்னகத்துக் கொண்ட பகுதி. இது தெய்வத்தன்மை கொண்ட நூறு திருப்பாடல்களைக் கொண்ட பகுதியாதலின் திருச்சதகம் என்பதாயிற்று. சதகம் அணைந்தோர் தன்மையின் பெருமையினை அறிவிப்பது. இச் சதகத்தில் கூறப்படும் அணைந்தோர் தன்மை பத்துவகையாம்; எங்ஙனம் எனின் இந்தச் சதகம் பதிற்றுப்பத்தந்தாதியாம்; பத்துக் கொத்துக்களையுடையதாம்.

முதல் பத்தும் தேகத்தில் காணப்படும் பரிபாக சின்னங்களை அன்பின் விளைவாகி இறைவா உன்னை நாடும் பொழுது உள்ளம் உடல் புளகாங்கிதம் அடைகின்றது. உணர்ச்சி வேகத்தால் நடுநடுங்குகிறது.

**"கைதான் தலை வைத்துக் கண்ணீர்**
**ததும்பி வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி**
**சயசய போற்றி யென்னும்**
**கைதான் நெகிழ விடேன் உடையாய்**
**என்னைக் கண்டு கொள்ளே."**

என்று மெய்யுணர்வுடன் பாடுகிறார். இது திருச்சதகம் 1ஆம் பாடல்

மேலும் இரண்டாவது பாடலில்

**"நள்ளேன் நினது அடியாரோடு அல்லால் நரகம் புகினும்**
**எள்ளேன் திருவருளாலே யிருக்கப் பெறின் இறைவா**
**உள்ளேன் பிற தெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே"**

இதனை மெய்கண்டாரால் சிவஞானபோதம் 12ஆம் சூத்திரத்தில் கூறப்பட்டது போன்று

**"அன்பரொடு மரீஇ"**

மணிவாசகரும் கூறுகிறார். நள்ளேன் நின் அடியரோடு அல்லால் என்று மூன்றாவது பாடலில் நான் உன்னிடம் பித்துப்பிடித்தவனாக வேண்டும்.

**"மத்த மனத்தொடு மாலிவ னென்ன மன நினைவில்**
**ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்**
**தத்த மனத்தன பேசவெஞ் ஞான்று கொல் சாவதுவே"**

சிவபோதத்தில் திளைக்கவேண்டும் என்கிறார். நான்காம் பாட்டால் தக்கன் வேள்வியில் தேவர்கள் அவர் பாகமென ஆட்டின் ஊனை உண்டார் என்று வருந்தும் பாங்கு கூறப்படுகின்றது. அவர்களே அமுதம் கடைந்த போது நஞ்சு உண்டாக அதனைக் கண்டு தம்மைக் காப்பாற்ற இறைவனை வேண்டுகின்றார். இன்பகாலத்து மறத்தலும் துன்பகாலத்து துதித்தலும் "நம்மவர் அவரே" என்று வருந்துகின்றார்.

ஐந்தாம் பாடலில் பூக்கொண்டு பூசை செய்திலேன் தவமே புரிந்திலேன் "அவமே பிறந்து அருவினையேன் சிவபோதம் அடைந்திலேன் ஆகையினால்

**"நின்திருவடிக்காம் பவமே அருளுகண்டாய்"**

உன்னை அடைவதற்கான பிறவியைத் தா என்று உணர்ந்து வருந்துகின்றார்.

**அன்பருள்ளம் கரந்து நில் லாக்கள்வ னேநின்றன்**
**வார்கழற் கன்பெனக்கு**
**நிரந்தர மாயருளாய் நின்னை யேத்த முழுவதுமே**

உன்னை வாழ்நாள் முழுவதும் துதிக்கத் திருவடிக்கண் என்றும் நீங்காத அன்பை எனக்கு எப்போதும் அருளுவாயாக என்றவாறு கூறிய மாணிக்கவாசகர்.

7ஆவது பாடலில்

**பிரமன் திருமால் முதலிய அன்பிலார்க்கு**
**அரியனாய் எமக்கு எளியனாதலை**
**செழுமலர் கொண்டெங்குந் தேடவப்**
**பாலிப் பாலெம்பிரான்**

இவ்வாறு தேவர்க்கு அப்பாற் பட்டவன். எமக்கு எளியவன்; அவன் புலித்தோல் போர்த்து காட்டில் ஆடுகின்றான் என்று இறைவன் இயல்பை மெய்யுணர்ந்து பாடுகிறார்.

எட்டாவது பாடலில் "உழி தருகாலும் கனலும் எதோ பேருழி வருவது எக்காலமே அக்காலமும் அழியாப் பெரும் பொருளாக இருந்து அருட் கூத்தாடுபவனே என் வினைகள் யாவும் அழிதருங்காலமும் அதுவேயாக அவை புனருற் பவித்து மீளவும் சூக்கும கன்மமாக வந்து என்னை பற்றாத வண்ணம் என்னை காக்க வேண்டும் என்று வருந்தி மணிவாசகரே கேட்கிறார் என்றால் நாம் எம்மாட்டே; இதன் கண் இறைவனே அநாதி நித்தியன் என்பதும் ஆன்மாக்கள் அவனைச் சார்ந்தே வினைகளை போக்கி கொள்ளத் தக்கன என்பதும் உணர்த்தப்படுகிறது.

ஒன்பதாம் பாடலில் சிவன் எம்பிரான் என்னை யாண்டு கொண்டான் என் சிறுமை கண்டும் என்று சிவனின் கருணையை வியக்கிறார்.

**"சிவனெம் பிரான் என்னை யாண்டு கொண்**
**டா னென் சிறுமைகண்டும்**
**அவனே எம்பிரான் நான் அடியேன்"**

என்கிறார். இதில் ஆண்டான் அடிமைத் திறத்தை மெய் உணர்ந்து கூறுகிறார்.

பத்தாவது பாடலில்

**"புகவே தகேனுனக் கன்பருள் யான் ஆயினும் என்னை யுனக் காட்**
**கொண்ட தன்மை என்னே புன்மையனை உயர்த்துகிறாய்"**

இது தன்முனைப்புச் சிறிதுமின்றி எல்லாவற்றையும் இறைவன் செயலாகக் கண்டு உவப்பு உவர்ப்பு நீங்கிய மெய்யன்பர்களைத் திருவடிநீழலில் இருத்தலாகிய பேரருளைச் செய்வதையே ஈண்டு புன்மையரை மிகவேயுயர்த்தி என்கிறார். உயிர்கள் எய்தும் உயர்வுக்கும் தாழ்வுக்கும் இறையருளே காரணம் என்னும் மெய்உணரப்படுதலின் இது மெய்யுணர்ந்து மணிவாசகர் பாடும் பத்துப் பாட்டுமாயிற்று.

மெய்யுணர்ந்த அடிகள், தமது மனத்தை முன்னிலைப்படுத்தி மனமே! திருவருளைப் பெற வேண்டிய நீ அதற்குரிய சாதனங்களை விட்டு உலகியல் இன்பத்தை விரும்பி அதற்குரிய சாதனங்களில் சார்ந்து ஒழுகுகின்றாயே இது தகாது. நயமாகவும், பயமாகவும் அறிவுறுத்துகிறார். அறிவுறுத்தல் பகுதியில் முதல் எட்டுப்பாட்டாலும் இறைவன் திருமுன் விண்ணப்பிப்பார் போல நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார். கடைசி இரண்டு பாட்டாலும் நேரே நெஞ்சை விளித்து இடித்துதைக்கிறார்.

**"நாடகத்தால் உன் அடியார் போல் நடிக்கும் என்னை"**

என்றும் நீங்காத அன்பு என்னுள்ளிருந்து உள்ளம் உருகும் வண்ணம் அவ்வன்பை அடியேற்கு அருளுவாயாக என்று வருந்தி வேண்டுகிறார்.

இரண்டாவது பாடலில்

**"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்"**

இந்திரப்பதவியையோ மண் ஆள்வதையோ நான் விரும்பேன் ஆயின் பெருமானே உன் அருள் பெறுநாள் எந்நாளோ என்று வருந்துகிறார். மூன்றாவது பாடலில் மலர் கொண்டு பூசை செய்யேன் நாத்தழும்பேறத் தோத்தரியேன் ஆயினும் நீ **"அருளமுதம் புரியாயேல் வருந்துவனத் தமியேன் மற்றென்னே நான் ஆமாறே"** என்று அருள் வேண்டி வருந்துகிறார். அருளமுதம் பூமாலை புனைந்தேத்தும் அதை செய்திலேன் என்று மிக வருந்தி இன்னும் பதினாலாம் பாடலில் நின் திருவடிக்கண் அன்புகொண்டு மனம் கரையேன், உருகேன், பூசியேன்,புகழேன், கோயில் அலகிடேன், மெழுகேன், கூத்தாடேன் என் கடமையை செய்யாது உரிமை கோருதல் எவ்வாறு அதை மணிவாசகர் **"சாமாறே விரைகின்றேன், சதுராலே சார்வானே"** என்கிறார். கடமையின்றி உரிமை கோரி அழிவை நாடுகின்றேனே என்று தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார்.

பதினைந்தாவது பாடலில், விண், மண், காற்று, தீயும் உடலும் உயிரும் உள் பொருள் இல்பொருள் எல்லாமாய் "யான் எனது" என்று கூறுவோரை ஆட்டிவைப்போனை எவ்வண்ணம் வாழ்த்துவனோ, என்று இறைவனின் வரம்பில் ஆற்றலையும் எம் போன்றோர் மடமையையும் மனத்துக்கு அறிவுறுத்துகிறார் "என் சொல்லி வாழ்த்துவனே" என்கிறார். பதினாறாவது பாடலில் வானோர் வாழ்துவது தாம் வாழ ஆனால் நானோ இப் "பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யான் உன்னை பரவுவனே" என்று இறைவனை தோத்தரிக்கிறார், வினையின் வந்ததாய் வினைகளையே விளைவிக்கும் பிறவியை "பாழ்த்த பிறப்பு" என்கிறார். தேவர் நிலை வேண்டாம் இப்பாழ்த்த பிறவியறுபடல் வேண்டும் என்றும் அதற்கு இறைவனை பணி என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார்.

பதினேளாவது பாடலில் "பரவுவா ரிமையோர்கள்" நால் வேதமும் உன்னை பாராட்டுகிறது. உண்மை அன்பை உடைய அடியார்கள் உன்னிடம் தலந்தே இருக்கின்றனர். ஆயினும் உனது திருவடியை காண்பார்களோ.

**"உணர்ந்தார்க்கே உணர்வரியோன்**
**பதிஞானம் பெற்றவரே உணர்வர்"**

ராசத தாமத குணமுடையோர் உணர்வரோ அவர் கழலிணைகளை கண்டு களியார் என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார்.

பதினெட்டாவது பாடலில் தேவர்கள் பொருட்காட்சியாலும் முனிவர் யோகக்காட்சியாலும் காண முயன்றனர். ஆனால் இறைவனோ மெய்ஞ்ஞானத்தால் அறியத் தக்கவன். திருவடிக்கு அன்பும் தொண்டும் செய்யாத பிறவியைக் காட்டிலும் இறத்தலே நல்லது என்று விண்ணப்பிப்பது போல நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார்.

பத்தொன்பதாவது பாடலில்

**"வேனில்வேள் மலர்க்களைக்கும்**
**வெண்ணகைச் செவ் வாய்க்கரிய"**

பானலார் கண்ணியர்க்கும் உருகுகின்ற நெஞ்சமே என் உள்ளத்தில் புகுந்த இறைவன் இப்போ பரந்த வெளியில் போயுள்ளான் நீ மாண்டு பொகாமல் வாழ்கின்றாயே என்று நெஞ்சை விளித்து உறுத்துகிறார். இவ்வாறு மனதுக்கு அச்சுறுத்தல் தெரிவித்த மணிவாசகர்.

இருபதாவது பாடலில் மிக வருந்தி விளிப்பாகும் படி மனத்துக்கு அச்சுறுத்துகிறார்.

**"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்**
**டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே**
**சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பலகாலும்**
**வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளதே"**

நெஞ்சே நான் சொல்வதை கேளாமல் இறைவனை ஏத்தாது துன்பக் கடலில் வீழ்கின்றாய். பேரின்பத்தில் அழுந்தி வாழவேண்டிய நீ சிற்றின்பத்தில் வினைக்கீடான பிறவிச் சூழலில் அகப்பட்டு வாழ்கின்றாயாதலின் வாழாத நெஞ்சமே வாழ்தற்காகச் சமைத்தானை நன்கு சமைத்தான் என்பது போல வாழத் தெரியாத மனமே ஆனால் வாழ்கின் றாயே என்று உயிர்களின் அறியாமைக்கு வருந்தி கூறுகிறார்.

**"ஆழாமல் காப்பானை ஏத்தாதே சூழ்கின்றாய் கேடு உனக்கு"**

இறைவன் கருவிகரணங்களால் சுட்டியும் அறிய முயற்சிற்க அதற்கு சுட்டறிவு பயன்படாது. உருகிய மனமும் பெருகிய கண்ணீரும் உண்டான காலத்திற்தான் கடவுட் காட்சி கருத்துக்கு புலனாகும் என்பதை மேல் இருபது பாடல்களிலும் உணர்ச்சி வசமாய் உணர்த்துகிறார் மணிவாசகர். முதல் பத்தும் இறைவனை அனுபவத்தால் உணர்தல். தேகாதி பிரபஞ்சங்களைக் கண்டு நீங்கி இறைவனை உணர்தல் பற்றியும் அடுத்த பத்தும் ஆன்மாவுக்கு அறிவுறுத்தல் பற்றியும் கூறப்பட்டது.

(சைவநீதி ஜய சிததிரை - ஆனி)

உ
சிவமயம்

# திருவாசகத்தில் ஓர் ஆற்றுப்படை

மட்டுவில் ஆ. நடராசா

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்று பாடினான் பாரதி. 'அச்சமென்பது மடமையடா' என்று பாடினார் இன்னொருவர். அரசியலில் இறைமாட்சி என்னும் அதிகாரத்தில்

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு"** என்று வள்ளுவர் கூறுகின்றார்.

எஞ்சாமை - இடையறாது நிலைத்திருத்தல். இவ்வாறு அஞ்சாமை பற்றிக் கூறிய வள்ளுவர், அதற்கோர் பறநடைபோல 'அறிவுடமை என்னம் அதிகாரத்தில்,

**"அஞ்சுவது தஞ்சாமை பேதமை அஞ்சுவ**
**தஞ்சல் அறிவார் தொழில்"** என்று கூறுகின்றார்.

அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சாதிருப்பது மடமை. அஞ்சவேண்டியதற்கு அஞ்சுதல் அறிவார் தொழில் என்பது இதன் பொருள்.

உடலோடு இரண்டறக் கலந்து நிற்கும் உயிர் 'இந்த உடலே நான்' என்று கருதும் நிலையில் தனக்குந் தன் உடைமைகளுக்கும் வருந்தீங்கு கண்டஞ்சும். நான் இந்த உடலல்ல என்றுணர்ந்த பின், உயிர் உடலுக்கு வருந்தீங்கு கண்டஞ்சாது. உடைமைகள் தனதல்ல என்றுணர்ந்தபின் உயிர் அதுவரை தனதெனக் கருதிய உடைமைகளுக்கு வருந் தீங்கு கண்டுமஞ்சாது.

உயிர்சார்ந்ததன் வண்ணமாயிருப்பது. அது உடலைச் சார்ந்து உடலாயும், சிவத்தைச் சார்ந்து சிவமாயுமிருக்கும். சிவத்தைப் பற்றி நிற்கும் போது உயிருக்கு உடற்பற்று அற்றுப்போகும். உடலைச் சார்ந்து நின்று உலகப் பொருட்களை அனுபவிக்கும் உயிர் சிவத்தைச் சார்ந்து நிற்கும் போது சிவானந்தத்தை அனுபவிக்கும்.

சமணர்கள் அப்பரைத் திருநீற்றறையில் அடைத்த போதோ, கல்லோடு கட்டிக் கடலிற் போட்ட போதோ, அவருக்கு நஞ்சூட்டிய போதோ அவர் அச்சங் கொள்ளவில்லை. அவரைக் கொல்லும் பொருட்டுச் சமணர்கள் ஏவிய மதயானை அவரை நோக்கிச் சென்ற போதும் உள்ளத்தாற் சிவனையே பற்றி நின்ற காரணத்தால் அப்பர் அதைக் கண்டு அஞ்சவில்லை.

அப்பர் சிவனை உறுதியாகப் பற்றி நின்றதுபோல, அவர் காலத்திலிருந்த சைவ சமயிகளிற் பலரும் சிவனை உறுதியாகப் பற்றி நிற்காவிட்டாலும் சிவனையே வழிபட்டனர். மிகச் சிலர் மாத்திரம் சிவனை வழிபட்டதோடு சிறு தெய்வங்களையும் வழிபட்டிருக்கலாம். சைவ சமயிகள் சிறு தெய்வங்களை வழிபடக் கூடாதென்பது நாயன்மார்களினதும் கருத்து. சிவனை மாத்திரம் வணங்குவதே சைவ சமயிகளுக்குச் சிறப்பு. "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்" என்று அப்பர் மறுமாற்றத் திருத்தாண்டகத்திற் கூறுவது இக்கருத்துப் பற்றியேயாகும்.

அப்பர் காலத்தில் இருந்தது போலன்றி, மாணிக்கவாசக சுவாமிகளின் காலத்தில் சிறு தெய்வங்களை வழிபடுவோர் தொகை அதிகரித்தது போலத் தோன்றுகின்றது. அந்நிலை கண்டு மாணிக்கவாசக சுவாமிகள் வருந்தினார். அதனால் அவர், "அஞ்சுவ தஞ்சாமை பேதமை" எனவும், "அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்" எனவும் வள்ளுவர் கூறியதை வழிமொழிய வேண்டியவரானார். இது காரணமாகவே அவர் அச்சப் பத்தைப் பாடினார் எனக் கருதலாம். அச்சப் பத்தில் அவர் இவற்றுக்கஞ்சேன் என்றும், இவருக்கு அஞ்சுவேனென்றும் கூறியிருக்கிறார்.

புற்றில் வாழ் அரவும் பன்புலால் வேலும் பிணிகளும் ஒளி வீசும் நெருப்பும் புரண்டு விழும் மலையும் கட்டுதறியை முரிக்கும் களிறும் அனல் கக்குங் கண்களையுடைய புலியும் முகிற்கூட்டங்களிற் தோன்றுகின்ற இடியும் கூரிய அம்பும் கூற்றுவனது சீற்றமும் ஒருவருக்கு மரணத்தை விளைவிக்கக் கூடியவை.

மரணம் என்பது உயிர் உடலை விட்டு நீங்குதல். உடற் பற்றுடையோருக்கு, தாம் பற்று வைத்திருந்த உடலை விட்டுப் பிரிவது வருத்தத்தைக் கொடுக்கும். உடற் பற்றற்றோர் அதை விட்டுப் பிரிவது காரணமாக வருத்தமுறார்.

உடற் பற்றற்றவ ராதலால் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு மரணம் பற்றியோ மரணத்தை விளைவிக்கக் கூடியவை பற்றியோ அச்சம் ஏற்படக் காரணமில்லை. அதனால் அவர் மேலே கூறப்பட்டவற்றில் எதற்குந் தான் அஞ்சப்போவதில்லை யென்று கூறினார்.

அரசன் ஒருவன் அவன் செங்கோலாயினும் தனக்குறு துணையாயிருக்கும் அமைச்சரையும் நம்பாமல் அவனையும் ஒற்றர் மூலம் ஆராய்ந்தறிவான். அதனால் அவன் வஞ்சகனே யாவன்.

சொல்லுதல் யார்க்கும் எளிது. அறங் கூறுவது சுலபம். கூறியபடி செய்வது கடினம். சொன்ன சொல்லின்படி நடக்காதவர் பொய்யர். நெற்றி நிறைய நீறணிந்து சிவநெறியைப் புகழ்ந்து பேசுபவனேயானாலும் அந்நெறியில் நில்லானாயின் அவன் பொய்யன். மருவருந்தக் கூடாது, களவெடுக்கக் கூடாது என்று போதனை செய்யும் ஒருவன் கண்டவரில்லெனக்கருதிக் கட்குடித்தும் களவெடுத்தும் வருவானேயானால் அவன் பொய்யன். அவனது போதனை சரியானது செயற்பிழையானது. இத்தகைய வஞ்ச நெஞ்சக் கள்வரோடு உறவு கொள்வது தவறு. இதைக் குறிப்பிடுவதற்காகவே மாணிக்கவாசக சுவாமிகள் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன் எனவும் மன்னரோருறவு மஞ்சேன் எனவுங் கூறினார்.

பிறர் கூறும் பொருந்தாப் பழிச் சொற்களும் வேட்கையும் வளைக் கையார் கடைக்கண் நோக்கும் அவர்களுடைய கிளிமொழியும் மயக்கவல்ல புன்முறுவலும் ஒருவனது கருத்தையும் பொறிபுலன்களையும் நிலை பிறழச்செய்யக் கூடியவை. புலன் வழிச் செல்லுதலன்றி அவற்றை நன்னெறியிற் செலுத்தும் ஆற்றலுடைமையால் மாணிக்கவாசக சுவாமிகள் இவற்றுக்கு அஞ்சேன் என்று கூறினார்.

வினை காரணமாகப் பிறப் பிறப்புக்கள் உண்டாகின்றன. பிறந்தவர் இறப்பது உறுதியாதலால் இறப்பதற்கு அஞ்சாதவர் பிறப்பதற்கு மஞ்சார். அதனால், வினைக்கடல் கொளினு மஞ்சேன், பிறப்பினோ டிறப்பு மஞ்சேன், என்றும் கூறினார் மாணிக்கவாசக சுவாமிகள். இந்த அஞ்சா நெஞ்சரை அஞ்சச் செய்வனவும் உண்டு.

மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற் கற்றிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன், மற்று மோர் தேவரெத்தேவரென்ன அருவராதவரைக் கண்டால் அஞ்சுவேன், என்பொலா மணியை ஏத்தி இனிதருள்பருகமாட்டா அன்பிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன், இருநிலம் பிளந்து சென்று திருமாலுங் காணமாட்டாச் சேவடி பரவி வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன். என் அப்பனுடைய பாதத் தாமரைகளை நினைத்துப் போற்றிப் புகழ்ந்து பூத்தூவி வணங்காதவர்களைக் கண்டால் அஞ்சுவேன். முன்னவன் பாதமேத்தி நெஞ்சு நெக்குருவாதவரைக் கண்டால் அஞ்சுவேன். விண்ணவர் நண்ணமாட்டாச் செறிதரு கழல்களேந்திச் சிறந்தினி திருக்கமாட்டா அறிவிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன். நீணிலா அணியினானை நினைந்து நைந்துருகி நெக்குக்கண்கள் நீர்சோர வாழ்த்தி நின்று ஏத்தமாட்டாதவரைக் கண்டால் அஞ்சுவேன் என்று அச்சப் பத்திற் கூறியிருக்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

சிவவேடந் தாங்கி நின்று பிற செய்வங்களை வணங்குவோர், சிவனை வணங்காதோர், அவனை நினைந்து நெஞ்சம் நெக்கு நெக்குருகாதோர் வஞ்சனையுடையோராவர். வெளிப்படையான பகைவரிலும் பார்க்க வஞ்ச நெஞ்சுடைய வேடதாரிகள் கொடியவராதலால், மேலே கூறப்பட்ட வஞ்சகருக் கஞ்சுவேன் என்று கூறினார் மாணிக்கவாசக சுவாமிகள்.

இவ்வாறு கூறியது மாத்திரமன்றி, தெய்வமென்ப தோர் சித்தமுண்டாகி, சிவனை அடையக் கருதுதலும் ஆறு கோடி மாயா சக்திகள் வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின எனவும் சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைய, கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும் படியேயாகி, மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது, அன்பெனும் ஆறு கரைபுரள, நாடோறுங் குறைவின்றி அன்பு செய்யும் அடியவர்களுக்குத் தாயாகி, அவர்களைச் சிவபெருமான் வளர்த்தெடுப்பான் என்று போற்றித் திருவகவலிற் கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

பலரைக் கூடி வாழும் பெண்ணொருத்தி அவர்களில் ஒருவரைத் தன் கணவனெனக் கூறுவது நகைப்புக்கிடமாவது போல, சிறு தெய்வங்கள் பலவற்றை வணங்குவோர் தம்மைச் சைவசமயிகள் எனக் கூறுவதும் நகைப்புக்கிடமானதாகும். பலரைக் கூடி வாழும் பெண் யாரைக் கணவனெனக் கூறுகின்றாளோ அவன் அவள்மீது அன்பு செலுத்தமாட்டான். அதுபோலவே பல தெய்வங்களை வழிபடுவோருக்குச் சிவன் பேரருள் புரியமாட்டான். "மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது... சாயாஅன்பினை நாடோறும் தழைப்பவர், தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்னுந் திருவாசகத் தேன்துளிகள் இக்கருத்தையே புலப்படுத்துகின்றன. இவ்வாறு கூறுவதன் மூலம் சிவனை மாத்திரம் வழிபடவேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது திருவாசகம்.

தேனுண்ணும் வண்டு மலர்கள் தோறுஞ் சென்று சிறிது சிறிதாகத் தேனெடுத்து அதனைச் சேர்த்து வைக்கின்றது. அதனால் அதற்குக் கிடைக்குமின்பம் நிலையானதல்ல. அந்தத் தேனீயைப் போல, சைவசமயிகளிற் பலர் வேறு வேறு மத வழிபாட்டுத் தலங்கள் தோறுஞ் சென்று வழிபடுகின்றார்கள். சிலரைச் சாமிகளாகப் பிரகடனப்படுத்தி அவர்களை வணங்குகின்றார்கள். அதனால் அவர்கள் பெறும் பேறேதுமில்லை. காகம் இருக்கப் பனம்பழம் விழுவது போல அவர்களுக்குச் சிறு சலுகை ஏதாவது கிடைத்தாலும் அது நிலையானதல்ல. அதனாற் பெறுமின்பம் சிற்றின்பமேயாகும். பிறந்திறந்த வரலாற்றையுடைய சிறு தெய்வங்களாலோ, சாமியெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர்களாலோ தம்மை வழிபடுவோருக்கு நிலையான பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க முடியாது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானால் மாத்திரமே தம்மை வழிபடுவோருக்குப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க முடியும். அதனாற் சிவனையே வணங்க வேண்டும்.

**“நினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே**
**நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்**
**குனிப் புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ”** என்கிறது திருவாசகம்.

அறிதற் கரியனாகிய சிவபெருமானுடைய அருட்சிறப்பையும் அவன் வன்நெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாது தன்னை ஆட்கொண்ட அருமைப்பாட்டையும் அரசவண்டுக்கு எடுத்துக் கூறி, அதைச் சிவபெருமானிடம் ஆற்றுப்படுத்துவது போல, இருபது பாடல்களை கொண்ட திருக்கோத்தும்பி மூலம், சிவனை மாத்திரமே வழிபட வேண்டுமென எமக்கு அறிவுரை கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**“அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்**
**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே**
**பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**
**மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ ”**

என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய பாடலின் பொருளை உணர வேண்டியது இக்காலத்தின் முக்கிய தேவையாகும். பத்து - பற்று.

**“சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்”**

என் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதும்

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக”**

என்று வள்ளுவர் கூறுவதும் ஒவ்வொருவரும் தாம் கல்விகேள்விகளாற் பெற்ற அறிவைச் செயற்படுத்த வேண்டுமென்பகை வலியுறுத்துவதற்கேயாம்.

திருவாசகத்தைப் படிப்போரும் ஆலயங்கள் தோறும் திருவாசக முற்றோதலை ஒழுங்கு செய்வோரும் கற்றாங் கொழுகத் திருவருள் துணை நிற்பதாக.

உ
சிவமயம்

# மணிவாசகரூடாக நாமுணரும் சைவசித்தாந்தம்

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் செல்வி. இ. வீரசிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்)

மணிவாசகரின் திருவாசகம் உயிருக்கு நிறைவை வழங்கும் ஆற்றல் மிகுந்த சொல்மணிகளாலானது. **'சிவபுராணம்'** முதலாக **'அச்சோப் பதிகம்'** ஈறாக 51 பதிகங்களைக் கொண்ட திருவாசகமானது ஓதுபவர், கேட்பவர் உள்ளத்தை உருக்க வல்லதாகி வீடளிக்கும் அருள் மொழியாகும்.

சாத்திர நூல்களுள் தலையாயது சிவஞானபோதம் என்றும், தோத்திர நூல்களுள் தலையாயது திருவாசகம் என்றும் சைவ உலகம் கூறுகின்றது. ஆனால் திருவாசகம் என்ற பக்திக்கடலுள் முத்து முத்தாகச் சைவசித்தாந்தக் கருத்துக்கள் புதைந்து நிறைந்து நிற்கின்றன.

சைவம் சிவத்தோடு சம்பந்தமுடையது. சைவத்தின் முடிந்த முடிபினைக் கூறுவது **"சைவசித்தாந்தம்"** ஆகும். மணிவாசகரின் வாழ்வும் வரலாறும் கூட சைவசித்தாந்த அடிப்படையை நினைவூட்டிக் காட்டி, விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

பண்டிய மன்னனின் முதல்மந்திரியாகிய திருவாதவூரர் அரசனின் கட்டளையை ஏற்று குதிரை வாங்கப் புறப்பட்ட பயணமானது, பின்னர் ஆன்மஞானம் பெறப் பறப்பட்ட பயணமாக முடிந்து விடுவதை அவர் வரலாறு காட்டிநிற்கின்றது.

திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில், குருவாக மானுடச் சட்டைதாங்கி எழுந்தருளி ஞானபோதனை செய்யும் காட்சியைக் கண்டதும், பொன்பொருள் கொண்டு குதிரை வாங்க வந்த மந்திரியின் நினைவும் செயலும் அவரிடமிருந்து நழுவிவிட்டது. உள்ளார்ந்த ஞானநாட்டம் மேலோங்க, காந்தம் கண்ட இரும்பு போல ஓடிச்சென்று, அவரடி வீழ்ந்து, தம்மை ஆட்கொள்ளும்படி இறைஞ்சுகின்றார்.

திருவாதவூரடிகட்கு மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநிபாதத்துள், நான்காம்தர தீவிரசத்தி பதிவுற்று, மலமயக்கமறும் காலம் அண்மித்தது கண்டு, கண்ணுதல் கருணையாளன் அடிகளாரை ஆட்கொள்ளகின்றார். நயன, பரிச, வாசக தீட்சை கொடுத்து, **"மாணிக்கவாசகர்"** என்ற தீட்ஷா நாமம் வழங்கி, ஞானம் வழங்குகின்றார். இவ்வாறு திருப்பெருந்துறையில் அன்பு வலையொன்று, விடுவிக்க முடியாத அருள்வலையுள் சிக்குண்டது.

பக்குவப்பட்ட உயிர்வர்க்கத்தில் சகலருக்கு குருவடிவாகியும், பிரளயாகலருக்கு தன் உண்மை வடிவிலும், விஞ்ஞானகலருக்கு அவர்களது அறிவுக்கு அறிவாய் நின்றும் இறைவன் ஞானம் உணர்த்துவான் என்ற தத்துவத்தை அடிகளின் வாழ்வில் காண்கிறோம்.

**"காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல், காண ஓணாதாம்**
**நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா முன்னம்**
**ஈட்டிய தவத்தினாலே இறையருள் உருவாய் வந்து**
**கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் குறுகுமாறே"**

சிவப்பிரகாசம் பாடல் 68

உமாபதிசிவாசியார் மேற்படி பாடலில், பிறவிகள் தோறும் ஈட்டிய சரியை கிரியா யோக விசேடத்தினால், பரமசிவன் திருவருளே திருமேனியாகக் கொண்டு, குருமூர்த்தியாய் எழுந்துருளி வந்து உண்மை ஞானத்தைக் கொடுத்தருளுவார் எனக் கூறியுள்ளமையை மணிவாசகர் வரலாற்றில் அனுபவ உண்மையாகக் காணக்கூடியதாக உள்ளது.

மாறிலா மாக்கருணை வெள்ளம், ஊனாய் உயிராய் உணர்வாய் உள்நின்று அன்பு செலுத்தும் அடியவர்கட்கு, அஞ்ஞானம் களைந்து, அற்புதக்காட்சி கொடுத்து, அருள்பெற வைக்கும் உண்மையை மணிவாசகர் வாழ்வில் காண்கிறோம்.

அதிசயம் காண்பதற்குரியது. அற்புதம் விளம்புவதற்கும் அறிவதற்கும் அரியது.
"அதிசயம் கண்டாமே" எனப்பாடுகிறார். (அதிசயப்பத்து - 26)
"அற்புதம் விளம்பேனே அறியேனே" எனப் பாடுகிறார் (அற்புதப்பத்து - 41)

இறைவன் தனக்காக நிதழ்த்திய அற்புதங்களை அழுதழுது தொழுது, பக்தி ததும்பப் பணிந்து ஏத்திப் போற்றிப் பாடுவதை திருவாசகம் முழுக்கப் பரக்கக் காணலாம்.

"இரும்புதரு மனத்தேனை, ஈர்த்து ஈர்த்து, என் என்பு உருக்கி, கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன்கழலிணைகள்" என இனிக்க இனிக்கப் பாடுகிறார்.

சிவஞானபோதம் 8ஆம் சூத்திரப் பொருளுடன் மாணிக்கவாசகர் வாழ்வைச் சான்று காட்டலாம்.

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"**

சிவஞானபோதம் சூ - 8

ஐம்புல வேடர்களோடு பழகி, அறிவு திரிந்து, தம் உண்மைநிலை தெரியாது நிற்கும் அரககுமாரனாகிய ஆன்மாவை, இறைவனே குருமூர்த்தியாக எழுந்தருளி, உண்மையுணர்த்தி ஆட்கொண்டு ஆனந்த அனுபவநிலையில் அரன்கழல் செல்லும் என்ற நிலையை, மெய்கண்டதேவர் கூறுகின்றார்.

ஐம்புல இன்பம் துய்க்கும் அரச வாழ்வில், அமைச்சர் பதவியில் சிக்கி, பிறவிப்பயனைச் சற்றே மறந்திருந்த ஆன்மாவாகிய வாதவூரடிகளை இறைவன் குருவாக எழுந்தருளி, ஞானத்தை உணர்த்தி ஆட்கொண்ட அனுபவத்தை அடிகளாரின் பாடல்களிலிருந்தே நாம் அறியக் கூடியதாக உள்ளது.

பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறியமுடியாத இறைவனை, பதி

ஞானத்தால் மட்டுமே உணரமுடியும் என்ற உண்மையையும் மணிவாசகர் வாழ்பனுபவத்திலிருந்து அறிகிறோம்.

**"சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவனருளாலே அவன்தாள் வணங்கி"** 1.17.18

**"தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையணித்திட்டு**
**ஊன் வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து"** 8.3.4

**"அடியேனை ஆட்கொண்டு**
**பக்திக்கடலுள் பதித்த பரஞ்சோதி"** 11.12.28

**"திருவருள் தந்து தன் பொன்னடியிணை காட்டி"** 41.1.3
என்றவாறு திருவாசகம் முழுவதும் நெக்கு நெக்கு உருகிப்பாடுகிறார்.

மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடியில் மணிவாசகர் தன்வசம் இழந்தார். உடல், உயிர், பொருள் மூன்றையும் ஞானகுருவின் திருவடியில் ஒப்புவித்தார். மன்னன் கொடுத்த பொருட்களைச் சிவப்பணிக்குச் செலவிட்டதால், அரசதண்டனைக்கு ஆளாக வேண்டிவரும் என அச்சபக்படவில்லை.

**"மாலற நேயம் மலிந ்தவர் வேடமும்**
**ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே."** சிவஞானபோதம் சூ-12
என்னும் சிவஞானபோத மெய்கண்டார் வாக்கை மெய்ப்பித்து நிற்கிறார்.

தத்துவம் கடந்த வாழ்க்கையைக் காண்கிறோம். பிறவிக் கருவேரை ஞானவாளால் அறுத்தெறியும் தீரனாக நிற்கிறார். அவரது சிந்தனை, வந்தனை எல்லாம் சிவனடியுடன் இணைந்து நிற்கிறது.

**"ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே!**
**செம்மையே ஆய சிவபதமளித்த செல்வமே! சிவபெருமானே!**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந்தருளுவது இனியே?"** 37.3
எனப்பாடியவர் "பிடித்தபத்துப் பதிகம்" (37) முழுவதும்

**"உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"** என்று சொல்லி தனது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றார்

**"எங்கெழுந்தருளுவது இனியே"** என்று கேட்டு தன் அற்புதப் பக்திவலையுள் அப்பனை அகப்படுத்திக் கொண்டதாகக் கூறி நிற்கிறார். அதுமட்டுமல்ல, குழைத்தபத்தில்

**"அன்றே என்தன் ஆவியும்**
**உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் என்னை ஆட்**
**கொண்ட போதே கொண்டிலையோ"** 33-7

என இறைவனிடம் தன்னை முற்றாக அர்ப்பணித்து நின்றவருக்காக இறைவனே குதிரைச் சேவகனாக மாறி அற்புதம் காட்டுகிறார். அரியும், பிரமனும் காணவொண்ணாத அற்புதன் மண்மீது வந்து அருளாடல் ஆடுகின்றான்.

வைகையைப் பெருக்கெடுக்கச் செய்கிறான். பிட்டுக்கு மண்சுமக்கிறான், பிரம்படி படுகிறான். அன்பருக்கன்பன்; ஆராவமுதன்; ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியான்; இறவாத அன்பு கொண்ட மணிவாசகருக்காக அருளாடல்கள் செய்கிறான்.

தனது உண்மை இயல்பாகிய சொரூபநிலையில் தனக்கென ஓர் உருவும், பெயரும், தொழிலும் இல்லாத இறைவன் உலகை நோக்கி தன் அடியவனுக்காக உருவும், பெயரும், தொழிலும் கொண்டுவந்து திருவிளையாடல் செய்தான்.

உயிர்களைப் பிணித்துள்ள பாசத்தளையை நீக்கி, பேரின்பத்தை வழங்க, அருட்சக்தி அவனுடன் நீக்கமற நிற்கும் இறைவன் அருட்சக்தியுடன் இணைந்து தாதான்யமாக நிற்பது ஞானக்கண்ணுடையோருக்கு மட்டுமே புலப்படும். ஊனக் கண்ணுடையோருக்கு உணரும் வல்லமை கிடையாது.

சைவசித்தாந்தம் இறைவனின் பெருங்கருணையைப் பேசுகிறது. கருணைகாரணமாகவே இறைவன் உயிர்கட்கு தனு, கரண, புவன. போகம் அளித்து, ஆணவமல நீக்கத்துக்கு வழிசெய்கின்றான். அத்தகைய கருணை காரணமாகவே, நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி அன்பு நெறியை அனுபவ நெறியாக மாற்றிக் காட்டுகின்றான். இதனையே மணிவாசகரும் "ஒன்றும் போதா நாயேனை, உய்யக் கொண்ட நின்கருணை" எனப் பாடியுள்ளார்.

அழுது அவனடி அடைந்து அருள் பெற்ற வாதவூரடிகள் இறையன்பு மணக்க இனிக்க இனிக்கப் பாடுகின்றார்; ஒரு போது பதைத்து நின்று பாடுவார்; பணிந்து நின்று பாடுவார்; பரவசமாகி நின்று பாடுவார்; அன்புருகி மெய்சிலிர்த்து நின்று பாடுவார்.

அவரது அற்புதப் பாடல்களை விரித்து நோக்கினால், அங்கு முப்பொருள் உண்மை, வினைக் கொள்கை, அத்துவித தத்துவம், மலபரிபாகம், சத்திநிபாதம், குருவருள், சிவோகம் பாவனை, சிவனுடன் கூடல் ஆகிய கருத்துக்கள் அவரது பதிகங்களில் மின்னிக் கொண்டிருக்கின்றன.

இறைவன் கைப்பட எழுதப்பட்ட நூல் மணிவாசகரது 8ஆம் திருமுறை மட்டுமே. திருவாசகத்தின் பொருள் சிவம் எனலாம். அதனை ஓதுவதால் பெறும் பயன் சிவமாம் தன்மை பெறுதலாம். திருவாசகம் இறைவனடி சேர்க்கும் இனிய ஆற்றுப்படை எனலாம்.

உ

# மணியான மாணிக்கவாசகர்

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா.

வாதவூரடிகளுக்கு குருந்த மரத்தடியில் குருவாகவந்து ஸ்பரிச தீட்சையளித்து சிவசொரூபமாக ஆக்கியருளினார் எல்லாம் வல்ல எம்பெருமானார்.

அந்நிகழ்ச்சியை திருவாசகத்துள் அடிகளே கூறுகின்றார்....

**நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்**
**தேனாயின்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
**தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியார்க் கருள்செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.**

தீட்சைபெற்றவுடன் மனதில் சிவானந்த உணர்வு பொங்கி வழிகின்றது. இந்த நிலையில் கலைவாணியே விரும்பிவந்து வாதவூரடிகள் நாவில் அமர்ந்தாள். அம்மாத்திரத்தில் தம்வசம் இழந்து கண்ணீர்மல்க, நாத்தழுதழுக்க தம்மை ஆட்கொண்டருளிய பெருமானை வணங்கினார். குருமணியை வணங்கி மாணிக்கச் சொற்களை வரிசைப்படுத்தி அன்பாகிய வடத்திற் கோர்த்து குருவின் திருவடிகளில் பாமாலையாகச் சமர்ப்பித்தார்.

குருவாக வந்த இறைவன் தம்சீடர்களுடன் மறைந்தார். மாணிக்கவாசகர் குதிரைவாங்கக் கொண்டுவந்திருந்த பொற்குவியலை சிவப்பணிக்கும், அடியார்கள் பணிக்கும் செலவிட்டார். இந்நிலையில் பாண்டியனிடமிருந்து மாணிக்கவாசகருக்கு ஓலை வந்தது.

அதன் வாசகம் 'தென்னவன் விடுக்கும் ஓலை. தென்னவன் பிரமராயன் என்னும் நல் அமைச்சன் காண்க! குதிரை வாங்க எடுத்துச் சென்ற பொருளை எல்லாம் வீண்செலவு செய்துவிட்டு துறவுக்கோலம் பூண்டிருப்பதாக அறிந்தோம். உமது கடமையில் தவறியதுமன்றி அரசுக்கருவூலத்தை எடுத்துச் செலவிட்ட குற்றத்திற்காகத் தண்டனை தப்பாது. இவ்வோலை கண்டவுடன் தூதருடன் உடன் வருக' - இது மாறன்.

செய்தியைப் படித்த மாணிக்கவாசகர் "ஐயனே! பெருந்துறை மணியே! பாண்டியன் தந்த பொருள் அனைத்தும் அடியார்களுக்கே செலவழித்தேன் எம்மைக் காப்பாற்றும்" என வேண்டினார்.

இறைவன் அசரீரியாக "பாண்டியனுக்கு ஓலை அனுப்பிவை! குதிரைகள் வரும்" என்று கூறினார்; அசரீரி கூறியபடி செய்தி அனுப்பிவிட்டு, வாதவூரடிகள் மதுரையை வந்தடைந்தார். பாண்டியன் சினம் தணிந்து, வாதவூரடிகளை வரவேற்று, எவ்வளவு குதிரை வாங்கினீர்? எனக் கேட்டான். மாணிக்கவாசகர் ஆலவாய் அண்ணலை மனதிற் கொண்டு தக்கபதிலை அளித்தார். மகிழ்ச்சியடைந்த பாண்டியன் அமைச்சரே! பிரயாணக்களை தீர மாளிகையில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்றான்.

குறித்த காலத்தில் குதிரைகள் வரவில்லை, மன்னன் கோபங்கொண்டு மாணிக்கவாசகரைச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான். சிறையில் மனமுருக இறைவனை வேண்டினார் அடிகள். அடிகளார் படும் துயரம் காணப் பொறாத இறைவன், மிழலைக் காட்டில் திரிந்து கொண்டிருந்த நரிகளைப் பரிகளாக்கி பெருமான்

குதிரைச் சேவகத் தலைவனாகவும் ஏற்று மதுரை நகர் அடைந்தனர். இதனைக்கண்ட மன்னன் மகிழ்ச்சியடைந்து, அடிகளாரைச் சிறையிலிருந்து விடுவித்து, தவறுநடந்துவிட்டது என வருத்தமும் அடைந்தார்.

பாகனாக வந்த இறைவன் குதிரைகளின் சிறப்புப் பற்றி மன்னனிடம் கூறி விடைபெற்றார். பரிபாகனாக வந்த இறைவன் கிளம்பும்போது மாணிக்கவாசகப் பெருமான் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

மாயக் குதிரைகளாக வந்தவையனைத்தும் அன்று இரவே நரிகளாக மாறி ஊளையிட்டன. மன்னன் சினம் கொண்டு மறுபடியும் மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்தான். இறைவன் தன் அடியான் படும் துயரங்கண்டு, வருணபகவானை நினைக்க கடும் மழை பெய்து நாட்டில் வெள்ளம் ஏற்பட்டு வைகையாறு கரைபுரண்டு ஓடியது. பல இடங்களில் உடைப்பெடுத்து மக்களைச் சூழ்ந்தது. பாண்டிய மன்னன் வீட்டுக்கொருவர் வந்து வைகைக்கரையின் உடைப்பை அடைக்கவேண்டும் என அறிவித்தான்.

வந்தி என்ற பிட்டு விற்றுப் பிழைக்கும் ஏழை மூதாட்டிக்கு ஆட்பலம் இல்லாததால், அவருக்குப் பணியாளாக இறைவன் சென்றான். மண்வெட்டி ஏந்திக் கூலி ஆளாகச் சென்றான். 'அப்பா நானோ ஏழை. என்னிடம் பொருள் வசதி இல்லை. வேண்டுமானால் உதிர்ந்த பிட்டை உனக்குக் கூலியாகத் தருகிறேன்' என்று கூறினாள். அதை ஏற்று பணியாளாகச் சென்றான் இறைவன். எல்லா ஆட்களும் மடையை அடைக்க, பிட்டு வாணிச்சியின் வேலையாளாக வந்த இறைவன் மரத்தடியில் படுத்து உறங்குவதைக் கண்ட தண்டநாயகன் கோபமடைந்து பிரம்பால் அடித்தான். அந்தப் பிரம்படி சகல ஜீவராசிகளுக்கும், மன்னனுக்கும் விழுந்தது. இந்நிகழ்ச்சியை குடிமக்கள் மன்னனிடம் முறையிட, மன்னனும் தன் முதுகில் விழுந்த அடியைக் காட்டுகிறான். அப்போது அசரீரியாக 'மன்னா! மாணிக்கவாசகன் குற்றமற்றவன். அடியார்கள் பொருட்டே செலவு செய்திருக்கிறான். நினது பொருள் அறத்தின் வழியே செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவனைச் சிறையிலிருந்து விடுவிப்பாயாக' என்று இறைவன் கூறினார். அது கேட்ட மன்னன் மாணிக்கவாசகரின் காலில் வீழ்ந்து வணங்கினான்.

மாணிக்கவாசகர் திருவாலவாய் திருக்கோட்டத்தினுள் புகுந்து சொக்கனை வணங்கி நின்றார். இறைவன் 'வாதவூரா, நீ உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் ஆகிய தலங்களைத் தரிசித்து, 'கோவை' என்னும் சிறந்த பனுவலைப் பாடிக்கொண்டு தில்லையம்பலத்தே வருக' என்று கூறினார். அத்தருணம் முதல் தம்பயணத்தைத் தொடங்கினார் மாணிக்கவாசகப் பெருமான். 'நமச்சிவாய வாழ்க' என்றெடுத்து சிவபுராணத்தைப் பாடிக் கொண்டு புறப்பட்டார்.

மாணிக்கவாசகப் பெருமான் பல தலங்களையும், திருக்கோவை, திருவாசகம், திருவெம்பாவை என்பவைகளைப் பாடியருளினார். சைவகுரவர் நால்வர்களில் ஒருவர். சைவம் தழைக்க வந்த மாமருந்து.

உ
சிவமயம்

# திருவாசத்தில் திருவம்மானை

திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம் அழகேஸ்வரி தியாகராஜா.

மகளிர் விளையாட்டுக்கள் பலவற்றைக் கருவிகளாகக் கொண்டு மணிவாசகர் பாடியருளிய இலக்கியச் சுவைமிக்க பல பாடற்பகுதிகள் திருவாசகத்தில் நிறைய உள்ளன. திருவம்மானை, திருவெம்பாவை, திருப்பொன்னூஞ்சல், திருத்தோணோக்கம் ஆகியவை இறைவன் புகழைச் சுவைபடக் கூறுவனவாக அமைந்துள்ளன. இவற்றுள் திருவம்மானைப் பாடல்பற்றிச் சிறிது விளக்கலாமென விழைகின்றேன்.

திருவம்மானையில் மணிவாசகர் பாடியுள்ள ஒரு பாடல் இறைவனின் பெருங்கருணைத் திறத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர் புக்குச் சிற்றம்பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்"

என்பதே பாடல்.

"தத்துவத்தைக் கல்லாத மனதையுடைய நான் மிக அற்பனானேன். எல்லாம் வல்ல பரமன் என்னிடத்து அருட்பித்தைக் கிளப்பிவிட்டுக் கல்போன்ற என் மனதைக் கனியாகப் பக்குவப்படுத்தினான். அவனது கருணைக் கடலில் என்னை மூழ்கச் செய்து வினையை அகற்றிய பரமஞானி அவன் தில்லை நகரில் சித்தாகாச சொரூபியாயிருக்கின்றான். விரைந்து செல்லும் காளை அவனுடைய வாகனமாகும். அத்தகையவனைப் பாடுவோம்" என்பதே பாடற்கருத்து.

மணிவாசகப் பெருமான் எம்பெருமானிடம் அளவற்ற காதல் கொண்டவர். அவர்களுடைய பக்தி, அழகிய காதலன் ஒருவனிடம் பருவம் வந்த மடமங்கை ஒருத்தி கொண்ட காதலைப் போன்றது. இறைவனை வழிபடுகின்ற நெறிகள் நான்கு. அவை தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவையாகும். மணிவாசகர் பிறப்பால் ஆடவராக இருந்தாலும் பாவனையால் ஆண்டவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் கொண்டு அன்பு செய்து சன்மார்க்க நெறியிலே நின்றவர்.

இறைவன் மாணிக்கவாசகரைத் திருப்பெருந்துறையிலே ஆட்கொண்டார். மணிவாசகப் பெருமான் திருவவதாரஞ் செய்தது திருவாதவூர். அவர் பலகாலம் பாண்டிய அரசனுக்கு அமைச்சராக இருந்து வாழ்ந்தஇடம் மதுரை. திருப்பெருந்துறையில் ஆத்மநாதன் என்ற திருநாமத்தோடு இறைவன் விளங்குகின்றான்.

இந்த மணிவாசக நாயகியை இறைவனாகிய நாயகன் ஆட்கொண்டருள வேண்டும். ஆடவன் ஒருவன் திருமணம் செய்துகொள்ளும்போது அதற்கென்று தனியே கோலம் புனைந்து வருவான். அவன் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு செயல்களை ஆற்றுபவன். அவனுடைய பெயர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோலத்தை நினைக்கச் செய்கிறது. பசுவாகிய பெண்ணுக்கு பதியாகிய இறைவன் நாயகன். பிராணனாகிய

நாயகிக்கு நாயகன் கடவுள். அவன்தான் உண்மையான பிராணநாயகன். பிராணன் அல்லது உயிருக்கு ஆத்மா என்பது ஒரு பெயர். ஆத்மா நாயகி, அதற்கு நாதன் இறைவன். தான் ஆத்மாக்களுக்கெல்லாம் நாதன் என்பதை நினைப்பூட்டுகிறான் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் ஆத்மநாதப் பெருமான் பசுவாகிய நாயகிக்கு நான் பதி என்று சொல்லிக்கொண்டிருக்கின்றான். அத் தலம் அவனுடைய மணவாளக் கோலத்தை, பிராணநாயகியை ஆட்கொள்ளும் உரிமையைப் புலப்படுத்தும் இடம். ஆதலால் அங்கே மணிவாசக நாயகிக்குத் திருமணம் நடைபெற்றது. இதில் எவ்வளவு பொருத்தம் பாருங்கள்.

திருமணம் ஆகிவிட்டது. மணிவாசக நாயகி தன் நாதனைக் கண்டுகொண்டு அவனால் ஆட்கொள்ளப் பெற்றாள். எப்பொழுதும் அவனை நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் வேலை செய்தாலும் விளையாடினாலும் அவன் நினைப்புத்தான். அவன் பேச்சுத்தான். எப்படியாவது ஒரு சம்பந்தத்தைக் கொண்டுவந்து அவனைப்பற்றிப் பேசுவாள். புதிதாகக் கல்யாணமான பெண்ணுக்கு இது இயல்புதானே!

இன்று அம்மானை பாடலாம்; வாருங்கள்'' என்றுதன் தோழியரை அழைக்கிறாள். காதலி தன் காதலனின் பெருமைகளைக் கண்டவர்களோடு பேச நாணமாக இருக்கும். உள்ளம் கலந்து பழகுகின்ற தோழியரோடு அதனைப் பேசலாம். இந்த இடம் சுவைத்து மகிழக் கூடியதே. மாணிக்கவாசகரின் கற்பனையைக் கண்டு மகிழும் இடமாகிறது இது.

அம்மானை விளையாட்டு நடைபெறுகிறது. மூன்று அம்மானைக் காய்களை வைத்துக்கொண்டு மேலே போட்டும், கையால் பிடித்தும் அம்மானையை ஆடுவார்கள். பெரும்பாலும் மூன்று பெண்கள் சேர்ந்து விளையாடும் ஆட்டம் இது. அதனால் மூவர் அம்மானை என்றும் ஒரு பெயர் இதற்கு வழங்கப்படுகிறது. மணிவாசகநாயகி தன் காதலனுடைய பெருமைகளைப் பாடி ஆடுகிறாள். மற்றவர்களும் பாடி ஆடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஆட்டந்தான் முக்கியம்; பாட்டு அதற்கு அடுத்தபடி உள்ளதுதான். இங்கு என்னவெனில் ஆட்டத்தைவிடப் பாட்டுத்தான் முக்கியம்.

மணிவாசகர் ஆட்டத்தை வெறும் பாவனையிற்றான் ஆடினார். ஆனால் பாட்டை மாத்திரம் உண்மையாகவே பாடிவிட்டார்.

பெண்கள் மென்மையான இயல்புடையவர்கள். அம்மானை ஆடும் மெல்லியவர்கள் ஆடும் நிகழ்ச்சிகளை முதலில் மாணிக்கவாசகர் கற்பனைக் கண்களால் காணுகின்றார். நேரேயும் உலகில் பார்த்தவரல்லவா? அம்மானை ஆடும் போது பெண்கள் கொடிகள் அசைவதுபோல் அசைகின்றவர்கள். அம்மானை ஆடும்போது அம்மானைக் காய்கள் மேலே போகின்றன. அவற்றை நிமிர்ந்து பார்க்கிறார்கள். கையில் விழும்போது கையில் பார்க்கிறார்கள். இப்படி நிமிர்ந்தும் தாழ்ந்தும் பார்ப்பதால் அவர்கள் காதில் அணிந்த குழைகளும் ஆடுகின்றன. இதனை,

"கையார்வளை இலம்பக் காதார் குழையாட ....." என ஆரம்பிக்கின்ற அம்மானைப் பாடல் மூலம் மணிவாசகனாரின் கற்பனை வெள்ளம் இலக்கியச் சுவையுடன் கரைபுரண்டோடுவதனைக் கண்டுகளிக்க முடிகின்றதல்லவா!

மணிவாசகப் பெருமான் இங்கே உண்மையாக அம்மானை ஆடவில்லை. தம் உள்ளத்துக்குள்ளே தம்மைப் பெண் ஆக்கிக்கொண்டு நினைவு எழுகின்ற மனத்தைத் தோழியாக்கிக் கற்பனையினால் ஆடுகின்ற ஆட்டம் இது. அந்தக் கற்பனையில்

எவையெவை இனிய பொருள்களோ எவையெவை அழகிய பொருள்களோ அவற்றையெல்லாம் சேர்த்துவைத்துச் சுவைததும்பப் பாடுகின்றார் மணிவாசகப் பெருமான்.

வாழ்க்கையில் இனிமையாக இருப்பவற்றைத் தொகுத்துச் சொல்வது கற்பனைக் கவிஞர்களுக்கு உள்ள சிறப்பு. நாம் இனிமை காணாத பொருள்களிலும் அனிமையைக் கண்டு உணர்த்தும் ஆற்றல் அவர்களிடம் இருக்கிறது. மணிவாசகர் சிறந்த கவிஞர். அவர் அழகுப் பிழம்பான பெருமானைப் பாடும் பாட்டில் அழகிய காட்சியை நிறுவிக் காட்டுகிறார். இன்பமும் அழகும் அமைதியும் உள்ளவற்றையே நினைத்துப் பார்க்கப் பயிற்சி வேண்டும். தெம்பு வேண்டும் கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் பக்தர்களுக்கும் அந்தத் தெம்பு இருக்கிறது.

மணிவாசகர் அந்தத் தெம்பு உடையவர். கற்பனையிலே அந்த அழகிய பொருள்களைக் காணும் ஆற்றல் பெற்றவர். அகக்கண் மூலம் கடவுளையே காணும் திறமுடையவர். அவர் கற்பனையில் அம்மானை ஆடுகிறார். அழகான பொருள்களையெல்லாம் தொகத்து வைத்து ஆடுகிறார். அழகிய தோழிகளை உட்கார வைக்கிறார். அவர்கள் தம் கைநிறைய வளையல்களை அணிந்து காதில் குவழை பூண்டு விளங்கிகிறார்கள். குழலில் மலர்கள் மணம் வீசுகின்றன. அவை தேனைச் சொரியும் மலர்கள். தேன் அவற்றிலிருந்து ஊற ஊற வண்டுகள் அவற்றில் வந்து மொய்க்கின்றன. தேனை உண்டு அவை பாடுகின்றன. ஆகா! அழகான கற்பனையல்லவா!

மணிவாசகப் பெருமான் உலகில் மகளிர் ஆடும் விளையாட்டை மாத்திரம் நினைக்கவில்லை. எம்பெருமானை நினைத்துப், பிறகே இந்த விளையாட்டை நினைத்தார். அம்மானை விளையாட்டை ஆடுவதற்கே காரணம் எம்பெருமான் பெருமையைப் பாடுவதற்குத்தானே.

மணிவாசக நாயகி எப்படியிருக்கிறாள்? "கையார் வளையும் காதார் குழையும் மையார் குழலும்" உடையவள்தான். அவற்றால் மட்டும் பெருமை வந்துவிடாது. எம்பெருமானிடம் உள்ள காதலிலே உளறிக் கிடக்கும் உள்ளத்தை உடையவள் அவள். மற்றத் தோழிகளும் அப்படியே உள்ளவர்கள். அது எவ்வாறு புலப்படுகிறது? அவர்கள் உள்ளத்தில் உண்டாகும் காதல் உணர்ச்சி அவர்கள் பாடும் பாட்டிலே புலனாகிறது. இந்தப் பெண்களுக்கோ இறைவனுடைய நினைவேயன்றி வேறொன்றும் இல்லை. அதனால் அவர்கள் பாடும் பாட்டு வேறு எதைப்பற்றியும் இருக்க நியாயம் இல்லை. இறைவனைப் பற்றியே பாடுகிறார்கள்.

இறைவனோ தனக்குமேல் யாருமில்லாத சர்வ சுதந்திரன். மற்றவர்கள் யாவரும் அவன் திருமுன்னர் கைகளைக் கூப்பிக் கும்பிடும் நிலையில் உள்ளார்கள். அவன் யாரையும் கும்பிடவேண்டியதில்லை. அவன் கைகள் வணங்கியே அறியாதன. சேர்ந்து அறியாக் கைகள்.

அம்மானைப் பாட்டுப் பாடும் பெண்கள் மணிவாசக நாயகியோடு சேர்ந்து பாடுகிறார்கள். அந்தப் பாடலில் தங்கள் ஆருயிர்த் தலைவனைப் பற்றிப் பாடுகிறார்கள். "அவன் அழகன்", "ஆற்றலுள்ள தலைவன்" என்று கூறுகிறார்கள். அவன் எங்கே இருக்கிறான்? அதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

"அவன் எல்லா இடங்களுக்கும் சொந்தக்காரன். அவனை எல்லா இடங்களிலும் காணலாம்."

"நான் கண்டதில்லையே, நான் பார்க்கும் இடங்களிலெல்லாம் கூட அவன் இருக்கிறான்."

"இருக்கிறான் எல்லா இடங்களிலும் அவனை எளிதில் காணமுடியாது."

"காற்று எங்கு இருந்தாலும் அதைக் காணமுடிகிறதா? அது அசையாமல் இருந்தால் அதை உணரக்கூட முடிகிறதில்லையே!

"அப்படியானால் அவன் எங்கும் இருக்கிறான் என்பது உண்மையாகுமா?"

இறைவன் தனக்குவமை இல்லாதவன். அவன் ஒருவன்தான் தலைவன். அகில உலகத்தில் உள்ளவர்களும் அவனுக்கு அடங்கினவர்களே. தலைவர் என்று அதிகாரத்தை மேற்கொண்ட எல்லோருமே இறைவனுக்கு அடங்கியவர்களாவர். இறைவனைக் கையெடுத்துக் கும்பிடுகின்றவர்கள் அவர்கள்.

என்றைக்கும் மெய்யான சாட்சியாக இருப்பது வேதம். அது தனக்குப் பொருள் இறைவன் என்று சொல்கிறது. அவன் சத்தியப் பொருள் என்று அறிவுறுத்துகிறது. இதனால் இறைவனுக்கு வேதியன் என்ற திருநாமம் அமைந்திருக்கிறது.

**"எங்கும் செறிந்தான அன்பர்க்கு**
**மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை"**

என்பது பாடற்பகுதி.

அன்பர்களுக்கு மாத்திரம் மெய்யனாக இருந்தால் மற்றவர்கள் அவனை எப்படி அறிவது? அவனை அறிந்து கொள்ளாமலே வாழ்வை வீணே கழிக்கும்படி விட்டுவிட்டால் எல்லோருக்கும் தலைவன் என்ற பெயருக்கு ஏற்றவன் ஆக முடியாதே.

ஆதலின் அவன் மற்றவர்களையும் ஆட்கொள்ளவேண்டி ஆங்காங்கே திருக்கோயில் கொண்டு வழுந்தருளியிருக்கின்றான்.

"என் நாயகன் எங்கும் இருப்பான் என்கிறாயே; அவனை நான் காணும் திட்டமான விலாசம் ஒன்றும் இல்லையா?"

"எல்லாருமே ஒருவாறு கண்டு தம் மரியாதையைக் காட்டச் சில இடங்கள் உண்டு."

"அவற்றுள் ஒன்றைச் சொல்; கேட்கலாம்."

"அவன் திருவையாறு என்ற இடத்தில் யாவரும் காண எழுந்தருளியிருக்கின்றான். அங்கே விருப்பத்தோடு சாதாரண மக்களையும் ஆட்கொள்ளும் பொருட்டு அமர்ந்திருக்கின்றான்.

இத்தனை வகையாக எம்பெருமான் பெருமையை விரித்துச் சொல்லி, "இவனைப் பாடி நாம் அம்மானை ஆடுவோம்" என்று மணிவாசக நாயகி பாடுகிறாள்.

**கையார் வளை சிலம்பக் காதார் குழைஆட**
**மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்**
**செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்தறியாக்**
**கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு**
**மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை**
**ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

என்பதே பாடல்.

இவ்வாறு மகளிர் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு திருவாசகத்தில் திருஅம்மானை பாடி இறைவன் புகழை இலக்கியச் சுவைபடக் கூறியுள்ளார் எம்பெருமான் மாணிக்கவாசகர்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - திருவாழ்கொளிபுத்தூர்

1ஆம் திருமுறை பண் : தக்கராகம்

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

1. **பொடியுடை மார்பினர் போர்விடையேறிப் பூத கணம்புடை சூழக்**
**கொடியுடை ஊர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி**
**வடிவுடை வாள்நெடுங்கண் உமைபாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்**
**கடிகமழ் மாமலர் இட்டுக் கறைமிடற் றானடி காண்போம்.**

(ப-ரை) பொடி உடை மார்பினர் - திருவெண்ணீற்றைப் பூசிய மார்பினையுடையவராய், போர்விடை ஏறி - போர்செய்தலையுடைய இடபத்தை யூர்ந்து, பூதகணம் புடைசூழ - பூதகணங்கள் பக்கத்திற் சூழ்ந்துவர, கொடி உடை ஊர்திரிந்து - கொடிகளையுடைய ஊர்கடோறும் திரிந்து, ஐயம் கொண்டு - பிச்சையேற்று, பலபல கூறி - பற்பலசொற்களைச் சொல்லி, வடிவுடை - அழகினை - அழகினையுடைய, வாள் நெடு - ஒளிபொருந்திய நீண்ட, கண் உமை - கண்களையுடைய உமையம்மையாரை, பாகம் ஆயவன் - வாமபாகத்திற் பெற்றவராகிய, கறை மிடற்றான் - நஞ்சுக்கறையைக் கண்டத்திலுடைய இறைவனது, அடி - திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், கடிகமழ் - மணம் கமழ்கின்ற, மாமலர் இட்டு - சிறந்த பூக்களைப் பெய்து அருச்சித்து, காண்போம் - காணக்கடவோம் என்றவாறு.

2. **அரைகெழு கோவண ஆடையின்மேலோர் ஆடர வம்மசைத் தையம்**
**புரைகெழு வெண்தலை ஏந்திப் போர்விடை ஏறிப் புகழ**
**வரைகெழு மங்கைய தாகமோர்பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்**
**விரைகமழ் மாமலர் தூவி விரிசடை யானடி சேர்வோம்.**

(ப-ரை) அரைகெழு - அரையிற் கட்டின, கோவண ஆடையின் மேல் - கோவண உடையின் மேல், ஓர் ஆடு அரவம் அசைத்து - ஒப்பற்ற ஆடுகின்ற பாம்பைக் கச்சையாகக்கட்டி, ஐயம் - பலியினை, புரைகெழு - ஓட்டையினையுடைய, வெண்டலை ஏந்தி - தசை கழிந்த வெண்டலையின் கொண்டு, போர்விடை ஏறி - பொருகின்ற இடபத்தை யூர்ந்து, புகழ - யாவரும் ஏத்துமாறு, வரைகெழு மங்கையது - பார்வதி தேவியாரது, ஆகம் - உடம்பினை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்தில் ஆகியவனாகிய, விரிசடையான் - விரிந்த சடையுடைய இறைவனது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், விரைகமழ் மாமலர் தூவி - வாசனை கமழ்கின்ற சிறந்த பூக்களை இறைத்து அருச்சித்து, சேர்வோம் - அடைவோம் என்றவாறாம்.

3. **பூணெடு நாகம் அசைத்தன லாடிப் புன்தலை அங்கையி லேந்தி
ஊணிடு பிச்சை யூரையம் உண்டி என்று பலகூறி
வாணெடுங் கண்ணுமை மங்கையோர்பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தாணெடு மாமல ரிட்டுத் தலைவன தாணிழல் சார்வோம்.**

(ப-ரை) பூண் - அணிகலனாக, நெடுநாகம் அசைத்து - பெரும் பாம்புகளை யணிந்து, அனல் ஆடி - அழலில் ஆடி, புன்தலை - புல்லிய தலையை, அம்கையில் ஏந்தி - அழகிய கையிற்றாங்கி, ஊண் - உணவு, இடுபிச்சை - இடப்படும் பிச்சை, ஊர் ஐயம் - பெய்கின்ற ஐயம், உண்டி - ஆகாரம், என்று பலகூறி - எனப் பலவகையிற் கூறி, வாள்நெடும்கண் - வாள் போன்ற நீண்ட கண்களையுடைய, உமை மங்கை - உமாதேவியார், ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாதியானவனான, தலைவன - இறைவனுடைய, தாள் நிழல் - திருவடிகளின் நீழலை, வாழ்கொளிபுத்தூர் - திரு வாழ்கொளி புத்தூரில், தாள்நெடு மாமலர் -காம்புகளையுடைய நீண்ட சிறந்த பூக்களை, இட்டு - பெய்து அருச்சித்து, சார்வோம் - சார்பாகக் கொண்டு அடைவோம் என்றவாறு.

4. **தாரிடு கொன்றையோர் வெண்மதி கங்கை தாழ்சடை மேலவைசூடி
ஊரிடு பிச்சைகொள் செல்வம் உண்டி யென்று பலகூறி
வாரிடு மென்முலை மாதொருபாக மாயவன் வாழ்கொளி புத்தூர்
காரிடு மாமலர் ஆவிக் கறைமிடற் றானடி காண்போம்.**

(ப-ரை) தார் இடு கொன்றை - மாலையாகக் கட்டின கொன்றை மலர், ஓர் வெண்மதி - சிறந்த வெண்பிறை, கங்கை - கங்கையாறு, அவை - ஆகியவற்றை, தாழ் சடைமேல் சூடி - நீண்டு தொங்குகின்ற சடைமே லணிந்து, ஊர் இடு பிச்சை - ஊராரிடு பிச்சையே, கொள் செல்வம் உண்டி என்று - கொள்ளத்தக்க செல்வமும் உணவும் ஆம் என்று, பல கூறி - பல வார்த்தைகளைச் சொல்லி, வார் இடு - கச்சணிந்த, மெல்முலை - மெல்லிய திருத்தனங்களையுடைய, மாது - உமாதேவியாரை, ஒரு பாகம் ஆயவன் - ஒரு பாகமாகக் கொண்டவனான, கறைமிடற்றான் - திருநீல கண்டத்தையுடைய இறைவனது, அடி - திருவடிகளை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், இடும் மாமலர் - இடத்தக்க சிறந்த பூக்களை, கார் தூவி - மேகம் போலச் சொரிந்து அருச்சித்து, காண்போம் - தரிசிப்போம் என்றவாறு.

5. **கனமலர்க் கொன்றை அலங்கல்இலங்கக் காதிலோர் வெண்குழை யோடு
புனமலர் மாலை புனைந்தூர் புகுதியென் றேபல கூறி
வனமுலை மாமலை மங்கையோர்பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்
இனமலர் ஏய்ந்தன தூவி எம்பெரு மானடி சேர்வோம்.**

(ப-ரை) கனம் மலர் - மிக்க மலர்களாற் றொடுக்கப்பட்ட, கொன்றை அலங்கல் - கொன்றைமாலை, இலங்க - விளங்க, காதில் - திருச்செவியில், ஓர்

வெண்குழையோடு - ஒரு வெண்ணிறமாகிய சங்கக்குழையோடு, புனம் மலர் மாலை - புனத்தில் பூத்தனவாகிய மலர்மாலைகளையும், புனைந்து - அணிந்து, ஊர் புகுதி - பலியின் பொருட்டு ஊர்கள் தோறும் புகுவாய், என்று பல கூறி - என்று தன்னோடு கிளத்தல் போன்ற பல வார்த்தைகளைச் சொல்லி, வன முலை - அழகிய திருத்தனங்களையுடைய, மாமலை மங்கை - சிறந்த இமயமலையின் புதல்வியாரை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகமாகக் கொண்டவனான, எம்பெருமான் - எம்பெருமானது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், ஏய்ந்தன - பொருந்துவனவாகிய, இனமலர் தூவி - கூட்டமாகிய மலர்களால் அருச்சித்து, சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

6. **அளைவளர்நாகம் அசைத்தன லாடி அலர்மிசை அந்தணன் உச்சிக்**
**களைதலை யிற்பலி கொள்ளும் கருத்தனே கள்வனே யென்னா**
**வளையொலி முன்கை மடந்தையோர்பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்**
**தளையவிழ் மாமலர் தூவித் தலைவன தாளிணை சார்வோம்.**

(ப-ரை) அளைவளர் - புற்றில் வளர்கின்ற, நாகம் அசைத்து - பாம்பினை யணிந்து, அனல் ஆடி - தீயின்கண் ஆடி, அலர்மிசை - திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய, அந்தணன் - பிரம்மதேவரது, உச்சி - மேலேயுள்ள, களைதலையில் - அறுக்கப்பட்ட தலையினிடத்து, பலி கொள்ளும் - பலியினைக் கொள்கின்ற, கருத்தனே - கருத்தையுடையவனே, கள்வனே - சோரனே, என்னா - என்று கூறி, வளைஒலி - வளைகள் ஒலிக்கின்ற, முன்கை - முன்னங் கைகளையுடைய, மடந்தை - உமாதேவியாரை, ஓர்பாகம் ஆயவன் - ஒருபாகத்திற் கொண்டவனாகிய, தலைவன் - இறைவனுடைய, தாள்இணை - இரண்டு திருவடிகளையும், வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், தளை அவிழ் - முறுக்கவிழ்கின்ற, மாமலர் தூவி - சிறந்த மலர்களைப் பெய்து அருச்சித்து, சார்வோம் - சாரக்கடவோமாக என்றவாறு.

7. **அடர்செவி வேழத்தின் ஈருரிபோர்த்து அழிதலை அங்கையில் ஏந்தி**
**உடலிடு பிச்சையோ டையம் உண்டி யென்று பலகூறி**
**மடனெடு மாமலர்க் கண்ணியோர்பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்**
**தடமலர் ஆயின தூவித் தலைவன் தாணிழல் சார்வோம்.**

(ப-ரை) அடர்செவி - தகடுபோன்ற காதுகளையுடைய, வேழத்தின் - யானையினது ஈர் உரி போர்த்து - உரித்ததோலைப் போர்த்து, அழிதலை - அழிந்த தலையை, அம் கையில் ஏந்தி - அழகிய கையிற்றாங்கி, உடல் இடு - உடம்புக் கிடுகின்ற, பிச்சையோடு - பிச்சையுடனே, ஐயம் உண்டி - ஐயம் உண்டி, என்று பலகூறி - என்று பலபடப்பேசி, மடல் நெடு மாமலர் - இதழ் களையுடைய நீண்டசிறந்த குவளைமலர் போன்ற, கண்ணி - கண்களையுடைய உமாதேவியாரை, ஓர்பாகம் ஆயவன் - ஒரு பாகத்திற் கொண்டவனான,

தலைவன் - இறைவனது, தாள்நிழல் - திருவடிநிழலை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், தடமலர் ஆயினதூவி - நீர்ப்பூக்க ளாயினவற்றைத் தூவி அருச்சித்து, சார்வோம் - சேரக்கடவோமாக என்றவாறு.

8. **உயர்வரை ஒல்க எடுத்த அரக்கன் ஒளிர்கட கக்கை யடர்த்து**
**அயலிடு பிச்சையோ டையம் ஆர்தலை என்றடி போற்றி**
**வயல்விரி நீல நெடுங்கணிபாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்ச்**
**சயவிரி மாமலர் தூவித் தாழ்சடை யானடி சார்வோம்.**

(ப-ரை) உயர் - உயர்ந்த, வரை - திருக்கைலாய மலையை, ஒல்க - துளங்கும்படி, எடுத்த - பெயர்த்தெடுத்த, அரக்கன் - இராவணனது, ஒளிர் - ஒளிவிடுகின்ற, கடகக்கை - கடகமணிந்த கைகளை, அடர்த்து - நசுக்கி, அயல் இடு - அயலவர் இடுகின்ற, பிச்சையோடு - பிச்சையுடனே, ஐயம் - பலியை, ஆர்தலை - உண்ணுகின்றவரே, என்று - என்று பாடி, அடி போற்றி - அடியிணைகளை வணங்கி, வயல்விரி - வயல்களில் மலர்கின்ற, நீலம் - நீலமலர் போன்ற, நெடும் கணி - நீண்ட கண்களையுடைய இறைவியை, பாகமாயவன் - செம்பாதியாகக் கொண்டவனாகிய, தாழ்சடையான் - தாழ்ந்த சடையையுடைய இறைவனது, அடி - திருவடிகளை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், சயம் - கூட்டமாக, விரி - மலர்கின்ற, மாமலர் தூவி - சிறந்த பூக்களை இறைத்து, சார்வோம் - சாரக்கடவோம் என்றவாறு.

9. **கரியவன் நான்முகன் கைதொழுதேத்தக் காணலும் சாரலும் ஆகா**
**எரியுரு வாகி ஊரையம் இடுபலி உண்ணியென் றேத்தி**
**வரியர வல்குல் மடந்தையோர்பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்**
**விரிமலர் ஆயின தூவி விகிர்தன சேவடி சேர்வோம்.**

(ப-ரை) கரியவன் - கருநிறத்தையுடைய திருமாலும், நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமனும், கைதொழுது - வணங்கி, ஏத்த - போற்றவும், காணலும் சாரலும் ஆகா - காண்பதற்கும் நெருங்குதற்கும் ஒண்ணாத, எரிஉருவாகி - தீப்பிழம்பின் உருவமாகி, ஊர் - ஊரார், இடு ஐயம் பலி - இடுகின்ற ஐயத்தையும் பலியையும், உண்ணி என்று - உண்பவரே என்று, ஏத்தி - போற்றி, வரி அரவு அல்குல் - வரிகளையுடைய பாம்பின் படம் போலும் அல்குலையுடைய, மடந்தை - இறைவியை, ஓர் பாகமாயவன் - ஓர் பாகமாகக் கொண்டவனாகிய, விகிர்தன - இறைவனது, சேவடி - சிவந்த திருவடிகளை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், விரிமலராயின - முறுக்குவிட்டு அவிழ்கின்ற மலர்களை, தூவி - சிந்தி, சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

10. **குண்டம ணர்துவர்க் கூறைகள்மெய்யிற் கொள்கையி னார்புறங் கூற**
**வெண்டலை யிற்பலி கொண்டல் விரும்பினை யென்று விளம்பி**
**வண்டமர் பூங்குழல் மங்கையோர்பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்**
**தொண்டர்கள் மாமலர் தூவத் தோன்றநின் றானடி சேர்வோம்.**

(ப-ரை) குண்டுஅமணர்-இழித்த சமணர்களும், துவர் கூறைகள் - சாயவுடைகளை, மெய்யில் கொள்கையினார் - உடம்பிற் போர்ப்பவராகிய புத்தர்களும், புறங்கூற - ஏசாநிற்ப, வெண்தலையில் - தசை கழிந்த வெண்ணிறமாகிய தலைக்கலனில், பலி கொண்டல் - பலி கொள்ளுதலை, விரும்பினை என்று - விரும்பினீர் என்று, விளம்பி - கூறி, வண்டு அமர் - வண்டுகள் விரும்பிச் சேர்கின்ற, பூ குழல் - இயற்கை மணமாகிய பொலிவினைப் பெற்ற கூந்தலையுடைய, மங்கை - உமாதேவியாரை, ஓர் பாகமாயவன் - இடப்பக்கத்தி லுடையவனாகி, தொண்டர்கள் - திருத்தொண்டர்கள், மாமலர்தூவ - சிறந்த பூக்களை இறைத்து அருச்சிக்க, தோன்ற நின்றான் - வெளிப்படுகின்ற இறைவனது , அடி - திருவடிகளை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

11. **கல்லுயர் மாக்கடல் நின்றுமுழங்கும் கரைபொரு காழிய மூதூர்**
**நல்லுயர் நான்மறை நாவின் நற்றமிழ் ஞானசம் பந்தன்**
**வல்லுயர் சூலமும் வெண்மழுவாளும் வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்**
**சொல்லிய பாடல்கள் வல்லார் துயர்கெடு தல்லெளி தாமே.**

(ப-ரை) கல்உயர் - மலைகள் உயர்ந்த, மா கடல் - பெரிய கடல், நின்று - பொருந்தி, முழங்கும் - ஒலிக்கின்ற, கரைபொரு - கரையைப் பொருகின்ற, காழி அம் மூதூர் - சீர்காழி யென்னும் அழகிய பழைய ஊரில் அவதரித்த, நல்உயர் - நல்ல உயர்ந்த, நான்மறை - நான்கு வேதங்களும் பொருந்துகின்ற, நாவின் - நாவினையுடைய, நல்தமிழ் - நல்ல தமிழில் வல்லவனாகிய, ஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தன், வல் உயர் - வலிய உயர்ந்த, சூலமும் - சூலத்தையும், வெண் மழுவாளும் - வெண்ணிறமாகிய மழுப்படையையும், வல்லவன் - வல்லவனாகிய இறைவனது, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரை, சொல்லிய பாடல்கள் - போற்றிய திருப்பாட்டுக்களை, வல்லார் - சொல்ல வல்லவர்களது, துயர் கெடுதல் - துன்பங் கெட்டொழிதல், எளிது ஆம் - எளிதாகும் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

உ

# திருவருட்பயன்

## பதிமுது நிலை - அதிகாரம் 1 வினாவிடைப் பயிற்சி

திருமதி. நரேந்திரதிலகை நடராஜா

1. **சிவநெறித் திருக்குறள் என்று எந்நூல் குறிப்பிடப்படுகிறது?** திருவருட்பயன்.
2. **திருவருட்பயனை நமக்கு அருளியவர் யார்?** உமாபதிசிவனார்.
3. **திருவருட்பயன் எத்தனை நிலைகளைக் கொண்டது?** பத்து நிலைகள்.
4. **திருவருட்பயனில் வரும் பத்து நிலைகளும் எவை?**
   1. பதிமுதுநிலை 2. உயிரவைநிலை 3. இருள்மலநிலை
   4. அருளதுநிலை 5. அருளுருநிலை 6. அறியும்நெறி
   7. உயிர்விளக்கம் 8. இன்புறுநிலை
   9. ஐந்தெழுத்து அருள்நிலை 10. அணைந்தோர் தன்மை.
5. **திருவருட்பயனின் காப்புச் செய்யுளைத் தருக?**
   "நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
   கற்குஞ்சரக் கன்று
6. **அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிறைந்து நிற்பவன் யார்?**
   சிவபெருமான்.
7. **தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் யார்?**
   எங்கள் பிரான் சிவபெருமான்.
8. **பின்வரும் குறளைப் பூரணப்படுத்துக?**
   பெருமைக்கும் நுண்மைக்கும் ...................... பேற்றின் 1. பேரருட்கும்
   அருமைக்கும் ........................... யான். 2. ஒப்பின்மை
9. **"ஆக்கிளவை யுமளித்து ஆசுடன் அடங்கப்
   போக்குமவன் போகாப் புகல்" இதில் இறைவனின் முத்தொழில்களும்எவை?**
   1. ஆக்கி - படைத்து, 2. அளித்து - காத்து, 3. போக்கி - அழித்து.
10. **இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?**
    1. அருவத்திருமேனி 2. உருவத்திருமேனி 3. அருவுருவத்திருமேனி
11. **இறைவனுக்கு மேலானதொரு பொருளில்லை. இதனைக் குறள் மூலம் கூறுக?**
    "பல்லாருயிர் உணரும் பான்மையென மேலொருவன்
    இல்லாதான் எங்கள் இறை"
12. **இறைவன் அடியவர் உள்ளத்தில் விளங்கி நிற்பவன். இதனைக் கூறும் குறளைத் தருக?** "ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
    வானாடர் காணாத மன்"

**இடைவெளி நிரப்புக.**

13. **இறைவன் உயிர்களில் கலந்து நிற்பினும் ........................... நிற்பவர்.**
    1. வேறாய்
14. **நலமிலன் நண்ணார்க்கு ............................ நல்லன்,** 1. நண்ணினர்க்கு
    **சலமிலன் ...................... சங்கரன்"** 2. பேர்
15. **மன்னுபவம் (நிலையான பிறவிப்பிணி) தீர்க்கும் மருந்து ஆவான் யார்?**
    இறைவன், இதனைத்தான் அப்பர் சுவாமிகளும் "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்று பாடியருளினார்.

**அருஞ்சொற்களின் பொருள்**

1. அகரஉயிர் போல் - 'அ' கரமாகிய உயிர் எழுத்து, பிறஎல்லா எழுத்துக்களிலும் இயைந்து நின்று அவற்றை இயக்குவது போல,
   நிகரில் இறை - ஒப்பில் பதியாகிய இறை,
   அறிவாகி - பேரறிவு உடையதாய்,
   எங்கும் - பிற எல்லாஉயிர்களிடத்தும்.
   நிறைந்து நிற்கும் - கலந்து நின்று, வேற்றுமையின்றி அவற்றை இயக்கும் பொருள்.
   உவமை - உயிர் எழுத்துக்கள் சித்தாகிய உயிர்கள்
   மெய்யெழுத்து - சடமாகிய பொருள்கள்
   உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்களை இயக்கும் அகரம் } சித்தும் சடமுமாகிய உலகை இயக்கும் இறைவன்

2. "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்".
   எங்கள் பிரான் - எங்கள் இறைவன்
   தன்னிலைமை - பிறப்பிறப்பின்றி என்றும் ஒரேதன்மையான நிலைமை
   மன்உயிர்கள் - தன்னைப்போல நிலை பெற்றனவாகிய உயிர்கள்
   சார - அடையும் படியாக
   தரும் - உயிர்களுக்கு உதவி செய்யும்
   சக்தி - தனது சக்தியோடு
   பின்னமிலான் - வேற்றுமையின்றி நிற்கின்றான்,
   நங்கையினால் நாம் அனைத்தையும் செய்கிறோம்
   நங்கை - சக்தியால் இறைவன் அனைத்தையும் செய்கிறான்

3. "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்".
   பெருமைக்கும் - எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி, பெரிய பொருளாய் நிற்கும் தன்மையிலும்,
   நுண்மைக்கும் - எல்லாப் பொருள்களின் ஊடும் கலந்து நிற்கும் நுண்மையிலும்,
   பேரருட்கும் - எல்லா உயிர்களிடத்தும் வைத்திருக்கும் மாறாத பெருங் கருணையினாலும்,
   பேற்றின் அருமைக்கும்- பிறர் தன்னைப் பெறுதற்கு மிகவும் அரியவனாய் நிற்கும் தன்மையிலும்,
   ஒப்பு இன்மையான் - எம்மிறைவன் தனக்கு ஒப்பாக வேறொன்றுமில்லாத சிறப்பினை உடையவன்.

தொடரும்...

உ
சிவமயம்

# திருமுறைப் பெருவிழாவும் எமது தல யாத்திரையும்

க.செல்வதி

அகில இலங்கைத் திருமுறைமன்றம், திருவாவடுதுறை ஆதீன சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி மையம் - கொழும்பு, இணுவில் ஆகியனவற்றின் அனுசரணையுடன் திருமுறைப் பெருவிழா ஆடிப்பூரணைதினம் நடாத்துவதற்குத் திருவருள் கூட்டியிருந்தது.

நாம் கொழும்பு சித்தாந்த, திருமுறைப் பயிற்சிமைய மாணவர்கள், விரிவுரையாளர்கள் சகிதம் திட்டமிட்டபடி 5ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் தெகிவளையில் இருந்து பேருந்து வண்டியில் ஆங்காங்கே பயிலுனர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டோம்.

எமது திருமுறைப் பெருவிழா 2017.08.07 திங்கட்கிழமை காலை இணுவில் கந்தசுவாமிகோயில் இளந்தொண்டர்சபை மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற ஒழுங்குகள் ஏற்பாடாகியிருந்தது

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் கோளறு பதிகத்தை எல்லோரும் சேர்ந்து பாடினோம். சித்தத்தைச் சிவன்பால் வைத்த அடியார்களாகிய எங்களுக்கு நாளும் கோளும் நன்மையே பயக்கும் என்று மனதிலே கொண்டு அதிகாலை வவுனியாவை அடைந்தோம்.

எமது இயக்குனரின் சகோதரி இல்லத்தில் கை, கால், முகம் கழுவி தேநீர் அருந்தி சிறிது இளைப்பாறினோம். அவர்கள் எங்களைக் கண்டதும் மிகவும் சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். அவர்களுக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டோம். வழியில் எமது பாரம்பரியமான, அற்புதம் நிறைந்த முறிகண்டிப் பிள்ளையாரைத் தரிசித்தோம்; எமது நிகழ்வுகள் இனிதே நடைபெற வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தோம். பயணம் தொடர்ந்தது. காலை 9.00 மணியளவில் இணுவிலை அடைந்தோம். கா.வைத்தீஸ்வரன் ஐயா எமக்கு தங்குவதற்கான ஏற்பாடுகளை திரு. நடராஜா அவர்களின் வீட்டில் செய்திருந்தார்.

இன்முகத்தோடு தேநீர், காலைஉணவு பரிமாறி எங்களை உபசரித்தார்கள். அடுத்து மானிப்பாய் மருதடி விநாயகரைத் தரிசித்து ஜம்புகோளப்பட்டினத்திற்குச் சென்றோம். அங்கே மோனத் தவநிலையிலிருக்கும் பிரமாண்டமான சிவனின் சிலையைத் தரிசித்து அருகேயுள்ள கோயிலுக்குச் சென்றோம். ஆள் அரவமே இல்லாத இடமாக இருந்தது. பூசைகள் நடைபெறாத நிலையில் சிதைவடைந்த கட்டிடங்களுடன் பாழடைந்த

நிலையில் காணப்படுவது கவலைக்கிடமான தொன்றாகும். ஒரு வயோதிப அம்மையார் கோயிலை ஒட்டியதாக உள்ள கடற்கரையில் அலங்காரங்களுடன் ஒரு வைரவர் சிலை ஒதுங்கியதாகக் காண்பித்தார். அந்த வைரவர் கடற்கரை அருகே ஒரு சிறிய மண்டபத்தில் சிவலிங்கத்திற்கு காவல் புரிபவராகக் காட்சியளிக்கிறார். மனதாரக் கும்பிட்டு சிறு காணிக்கையை உண்டியலில் செலுத்திவிட்டுக் கவலையோடு பேருந்தில் ஏறிக்கொண்டோம்.

பின்னர் நாம் இணுவில் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றோம். முழுக் கிராமமும் விழாக்கோலம் பூண்டிருப்பதை ஒலிபெருக்கியில் காற்றலைகளில் மிதந்து வந்த பக்திப்பாடல்கள் பறைசாற்றின. பக்திமயமான சூழல், நாம் பக்திப்பெருக்கோடு கோயிலை வலம் வந்தோம். முருகனின் அருட்கடாட்சத்தோடு அருகிலுள்ள இணுவில் இளந்தொண்டர்சபை மண்டபத்தை அடைந்தோம்.

செல்லத்துரை ஐயாவும் இணுவில் மைய மாணவர்களும் எம்மை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெருமையோடு வரவேற்றார்கள், சுவாமிகளின் தீபாராதனையைத் தொடர்ந்து எமக்கு யாழ்மண்கமழும் சுவையான மதியபோசனம் பரிமாறினார்கள். நிறைவாக இருந்தது. சிறிது நேரம் எங்கள் நிகழ்ச்சி நிரல் பற்றி உரையாடினோம்.

அடுத்து எமது நிகழ்ச்சியான திருமுறைப் பாடல்களை பக்கவாத்தியத்துடன் சேர்ந்து பாடிப் பயிற்சி பெற்றோம். எமது நிகழ்ச்சி இனிதே நடைபெறும் என சங்கற்பம் செய்து கொண்டு, நல்லூர்க் கந்தனின் பத்தாம் நாள் திருவிழாவாகிய மஞ்சத் திருவிழாவைக் காணச் சென்றோம். மக்கள் வெள்ளத்தில் ஆடிஅசைந்துவரும் மஞ்சத்தில் முருகனைக் கண்ணாரக் கண்டு தரிசித்து மகிழ்ந்தோம். இரவுபோசனம் திருமுறைப் பயிற்சிமைய மாணவி புஷ்பராணியினுடைய இல்லத்தில் மனநிறைவுடன் பரிமாறப்பட்டது. நன்றி கூறிவிட்டு எமது இருப்பிடத்தை அடைந்தோம்.

மறுநாள் எமது திருமுறைப் பெருவிழா. அதிகாலை 5.45 மணியளவில் நடைதூரத்தில் உள்ள இணுவில் இளந்தொண்டர்சபையை அடைந்தோம். செல்லத்துரை ஐயா அவர்கள் எங்களை வரவேற்றார்கள். 6.00 மணியளவில் தீபாராதனையைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் ஆரம்பமாகியது. பின் ஒரு குழுவினர் இணுவில் பரமானந்தவல்லி அம்மன் கோயிலை அடைந்தோம். அங்கு நால்வர் திருவுருவங்களுக்கும் திருமுறை ஏட்டுச் சுவடிகளுக்கும் தீபாராதனை நடைபெற்று விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது. பின்பு நால்வர் திருவுருவங்களும் பல்லக்கில் வீற்றிருக்க திருமுறை ஏட்டுச்சுவடிகள் உடன் ஆலவட்டம் தாங்கிச் சிவனடியார் புடைசூழ மங்கல வாத்தியங்களுடன் விழா மண்டபத்தை நோக்கி ஊர்வலமாக புறப்பட்டோம். பயிற்சிமைய மாணவர்கள் பன்னிருதிருமுறை பாராயணம் செய்துகொண்டுவந்தார்கள். வழியிலே கிராமத்தவர்கள் பூரணகும்பங்கள் வைத்துப்

பிரசாதம் வழங்கிப் பணிந்து நின்றார்கள். இணுவில் நடமாடும் காவல்துறையினர் கும்பம் வைத்துச் சிறப்பித்ததும் வரவேற்கத்தக்கது. விழா மண்டபத்தை அடைந்ததும் 8.00 மணிக்கு நால்வருக்கும் திருமுறை ஏட்டுச்சுவடிகளுக்கும் விசேட பூசை நடைபெற்றது. தீபாராதனையைத் தொடர்ந்து நாமும் மலர் சாத்தி வழிபட்டோம்.

ஆசியுரை, வரவேற்புரையைத் தொடர்ந்து முதலில் திருமுறை மன்ற மாணவர்களின் திருமுறைப் பண்ணிசையும், இரண்டாவதாக கொழும்பு பயிற்சிமைய மாணவர்களின் திருமுறைப் பண்ணிசையும், மூன்றாவதாக இணுவில் திருமுறைப் பயிற்சிமைய மாணவர்களின் திருமுறைப் பண்ணிசையும் நடைபெற்றன. மூன்று குழுவினருடைய நிகழ்ச்சிகளும் நன்றாயிருந்தன. அடுத்து சிறப்புச் சொற்பொழிவைத் தொடர்ந்து திருநெறிய தமிழ் இசைவாணர்கள் பொன்னாடை போர்த்துப் பொற்கிழி, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

அடுத்ததாக பண்ணிசை பயிலும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த வட இலங்கை சங்கீத சபைக்குரிய பாடத்திட்ட நூல், சைவநீதி சிறப்பு மலர் ஆகிய இரு நூல்கள் வெளியிடப்பட்டன.

பின் கௌரவிப்புரை மகிழ்வுரையைத் தொடர்ந்து மாகேசுர பூசை கலாபூசணம் சைவப்புலவர் செல்லத்துரை ஐயாவினால் வழங்கப்பட்டது. தத்துவ விளக்கங்களுடன் ஒவ்வொருவரையும் சிவனடியாராகப் பாவனை செய்து உணவு பரிமாறப்பட்டது. சைவசித்தாந்தம், திருமுறை பயிலும் மாணவர்கள் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்தோம். ஐயாவுக்கு நன்றியைத் தெரிவித்ததோடு புகைப்படங்களும் எடுத்துக் கொண்டோம். எமது திருமுறைப் பெருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறியது.

நாம் என்றும் காலத்தால் அழியாத பழைமையான பக்திப்பாடல்களின் ஒலி, ஒளி நாடா இறுவட்டுக்களைப் பார்த்தும் கேட்டும் பக்திப் பரவசமுடையவர்களாய் மாதம்பை முருகன் கோயிலை அடைந்தோம். சுவாமி தரிசனம் செய்து வெளிவீதிக்கு வந்தோம். உலோக வடிவிலான மிகவும் உயரமான வேல் முருகனைத் தரிசித்தோம். இவர் வெளிப்புற சுற்றுப்பிரகார மதிலில் கருணையே வடிவமாக 'வேலுண்டு பயமில்லை' என்று கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். தொடர்ந்து சிவன், ஆஞ்சனேயர், இலக்குமி, பள்ளிகொள்ளும் திருமால் முதலானோரின் சுதைவடிவிலான அழகிய வர்ணங்கொண்ட சிற்பங்களைக் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தோம். அவை பிரமாண்டமானதாகவும் பிரமிக்கக்கூடியவையாகவும் அழகு நிறைந்தும் காணப்படுகின்றன. அவர்களையும் மனதார வழிபட்டு பயணத்தை நிறைவுசெய்தோம்.

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க...."

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளின்
அருள் ஆசியுடன்**

**திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்த,
சைவத்திருமுறை நேர்முகப்பயிற்சி மையம் கொழும்புக் கிளை,
முன்னேச்சரம் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மடத்துடன்
இணைந்து நடாத்தும்**

# திருவாசகப் பெருவிழா

**காலம்**

**ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 02 ஆம் திகதி.
2017.12.17 ஞாயிற்றுக்கிழமை.**

**இடம்.**

**சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி மண்டபம்.
முன்னேச்சரம்.**

**முதன்மைவிருந்தினர்.**

பிரம்மஸ்ரீ **ச. பத்மநாபன்** அவர்கள்
தலைவர், சமஸ்கிருதத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
பிரதமகுரு, தர்மகத்தா, முன்னேச்சரம் தேவஸ்தானம்.

**சிறப்பு விருந்தினர்.**

திருமதி **K. சந்தனமாலா** S.L.P.S. அவர்கள்
அதிபர், ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி, முன்னேச்சரம்.

**தலைமை.**

சைவப்புலவர், சித்தாந்தச்செம்மணி
**செல்லையா நவநீதகுமார்** M.A. அவர்கள்

## நிகழ்வுகள்

8.30 - வடிவாம்பிகாசமேத முன்னை நாதப்பெருமான் சந்நிதியில் பூசை வழிபாட்டைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகளும், திருவாசகம், திருக்கோவையார் நூல்களும் ஊர்வலமாக விழா மண்டபத்தை வந்தடைதல்.

9.00 - மங்கல விளக்கேற்றல்.

- கொடிக்கவி பாடி, இடபக்கொடியேற்றல்.

9.10 - திருவாசகம் ஓதல்.

9.15 - வரவேற்பு நடனம் - சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி மாணவிகள்.

9.20 - வரவேற்புரை - சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் சாமித்தம்பி பொன்னுத்துரை அவர்கள்.
செயலாளர், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த, திருமுறைப் பயிற்சிமையம்

9.30 - வாழ்த்துரை - சிறப்பு விருந்தினர்

9.40 - தலைமையுரை

9.55 - சிறப்புரை - "முத்திதரும் பக்திப்பனுவல்"
கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்

10.15 - சைவநீதி சிறப்பிதழ் வெளியீடு

- வெளியீட்டுரை பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் அவர்கள்.
- முதற்பிரதி வழங்கல் - A.M.T. தனநாயகம் அவர்கள்
- சிறப்புப்பிரதிகள் வழங்கல்

10.45 - போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள்:

- பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டிகள்.
- போட்டிகளில் திறமைகாட்டிய மாணவர்களுக்குப் பரிசு வழங்குதல்

11.10 - "திருவாசகத் தேனிசை"
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த,திருமுறைப் பயிற்சி மைய இணுவில் கிளை.

11.30 - தீப நடனம் - சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி மாணவிகள்.

11.35 - பண்சுமந்த பாடலிசை - கொழும்பு திருமுறைப் பயிற்சி மையத்தினர்.

11.55 - நாடகம் "வாதவூர் வள்ளல்"
(திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த, திருமுறைப் பயிற்சிமைய இணுவில்கிளை இளங்கலைஞர்கள்.)

12.25 - மகிழ்வுரை - திரு. வடிவேல் வேலுஐயா அவர்கள்.
(தலைவர், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மடம், முன்னேச்சரம்.)

12.30 - குருமரபு வாழ்த்து

- மாகேசுர பூசை - திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மடம்

அனைவரையும் இப்பெருவிழாவில் கலந்து சிறப்பித்து மகிழுமாறும் சைவநீதி சிறப்புமலரைப் பெற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாக்குழுவினர்

உ
சிவமயம்

திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தினரும் (கொழும்பு), முன்னேச்சரம் திருக்குறிப்புத்தொணட் நாயனார் மடமும் இணைந்து நடாத்திய திருவாசகப்பெருவிழா போட்டிகள். மார்கழி 2017. பரிசு பெறுபவர்கள் விபரம்.

**பேச்சுப்போட்டி**

| கீழ்ப்பிரிவு பெயர் | சுட்டிலக்கம் | பாடசாலை |
|---|---|---|
| 1. S. மவிஜன் | கீ/பே 3-1 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம். |
| 2. K. கதுர்சன் | கீ/பே 4-1 | புத் /ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்ப பாடசாலை, ஆண்டிமுனை, உடப்பு. |
| 3. S. தானியா சவினி | கீ/பே 3-2 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம். |
| 3. செ. ரிஜிநத் ன் | க/ீபே 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| **மத்தியபிரிவு** | | |
| 1. பா. ஹர்ஷனி | ம/பே 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 2. K. பதுமன் | ம/பே 2-2 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 3. S. கேதுர்ஷனா | ம/பே 2-1 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| **மேற்பிரிவு** | | |
| 1. K. சதுர்ஷிகா | மே/பே 1-1 | சிலா/நஸ்றியா மத்திய கல்லூரி. |
| 1. P. அனோஜா | மே/பே 2-3 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 2. L. மிதுர்ஷா | மே/பே 3-2 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம். |
| 3. ஜீ. ருதுர்ஸ்னி | மே/பே 6-2 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |

**பண்ணிசைப்போட்டி**

| கீழ்ப்பிரிவு | | |
|---|---|---|
| 1. ந. தனுர்த்திகா ஹரினி | கீ/ப 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 2. M. கிஷோனி | கீ/ப 3-2 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம். |
| 3. தி.பவஞ்ஜனா திலாங்கி | கீ/ப 5-3 | சிலா/வடிவாம்பிகை அறநெறிப்பாடசாலை, முன்னேச்சரம். |
| 3. க. திலோஷ் | க/ீப 6-3 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| **மத்தியபிரிவு** | | |
| 1. ந. சதுர்த்திகா ஹரினி | ம/ப 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 2. சி. யுகதுரக் க் ா | ம/ப 6-2 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 3. P. யக்சீகன் | ம/ப 2-1 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 3. K. நிவேதா | ம/ப 2-2 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| **மேற்பிரிவு** | | |
| 1. K. திதுர்ஷா | மே/ப 2-1 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 2. S. சபரீஷா | மே/ப 3-2 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ் மகாவித்தியாலயம். |
| 3. M. ரஜீதா | மே/ப 2-3 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |

**கட்டுரைப்போட்டி**

| மத்தியபிரிவு | | |
|---|---|---|
| 1. வி. யாழினி | ம/க 6-2 | சிலா/ஸ்ரீ வடிவாமப்'கை இந்துக்கல்லூரி. |
| 2. M. நிதுஷிகா | ம/க 5-2 | சிலா/வடிவாம்பிகை அறநெறிப்பாடசாலை, முன்னேச்சரம். |
| 3. K. பிருந்தா | ம/க 1-2 | சிலா/நஸ்றியா மத்திய கல்லூரி. |
| **மேற்பிரிவு** | | |
| 1. சி. காயத்ரி | மே/க 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 2. S. லக்ஷானி கணேசிகா | மே/க 2-1 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 3. ஜோ. காயத்ரி | மே/க 6-3 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| **அதிமேற்பிரிவு** | | |
| 1. A. கஜவதனா | அ/க 1-1 | சிலா/நஸ்றியா மத்திய கல்லூரி. |
| 2. அ. டிலக்ஷன் | அ/க 6-1 | சிலா/ஸ்ரீ வடிவாம்பிகை இந்துக்கல்லூரி. |
| 3. M. மினோசன் | அ/க 2-2 | புத்/ ஆணடி முனை தமிழ் மகாவித்தியாலயம், உடபபு . |

**திருவெம்பாவை மனனப்போட்டி**

| | | |
|---|---|---|
| 1. K. திதுர்ஷா | தி/ம 2-1 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 2. V. மதுரா | தி/ம 2-2 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 3. K. தேனுஜா | தி/ம 2-4 | புத்/ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு. |
| 3. S. சூரியவதனி | தி/ம 3-4 | சிலா/புனித பேர்ணதேத் தமிழ், மகாவித்தியாலயம். |

# திருமுறைப் பெருவிழா 2017.08.07



திருமுறை மன்ற மாணவர்கள்




கொழும்புத் திருமுறைப் பயிற்சிமையப் பயிலுனர்கள்



இணுவி[illegible]மறைப் பயிற்சிமையப் பயிலுனர்கள்







விரிவுரையாளர்களின் சிறப்புச் சொற்பொழிவு

# திருமுறைப் பெருவிழா 2017.08.07
## திருநெறிய தமிழிசை வாணர்
## பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்











## திருமுறைப் பெருவிழா சிறப்புப் பிரதி பெறுபவர்கள்





Sharp Graphics (Pvt.) Ltd.